Registered as a news paper.　　பக்கங்கள்: பன்னிரண்டு　　விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
மூலம்
தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
வங்கிக்கணக்கு அவசியமில்லை
கமிஷன் ஏதுமில்லை
365 நாட்களிலும் எந்நேரத்திலும்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 19 (10.05.2004) திங்கட்கிழமை இதழ்:221

# கிழக்கின் பாதுகாப்பு நிலைமை; ஆராய்வதற்கு உயர்மட்ட மாநாடு!

## கொழும்பில் இன்று நடைபெறும்

(கொழும்பு)

**கிழகத்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று இன்று நடைபெறவிருக்கிறது.**

**மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக - விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் வேறு சிலரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதையடுத்தே இம்மாநாடு இன்று கூட்டப்படுகிறது.**

இந்தச் சம்பவங்களின் பின்னணியிலுள்ள சக்திகளுக்கும் இராணுவத் தரப்புக்கும் உறவுகள் இருப்பதாகவும், விடுதலைப் புலிகளை படுகொலை செய்த கொலையாளிகள், இரணுவத்தினரின் உதவியின்றித் தப்பியிருக்க முடியாதென்றும் புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

அத்துடன், இதுபோன்ற படுகொலைகள் இனிமேலும் தொடர்ந்தால்- பாரதூரமான விளைவுகளை இராணுவம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் புலிகள் எச்சரித்திருந்தனர்.

இதையடுத்தே, கிழக்குப் பகுதி நிலைமை குறித்து ஆராயும் விசேட பாதுகாப்பு மாநாடு ஒன்று இன்று நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி றியல அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா ஆகியோருடன் போர்நிறுத்தக் கண்காணிபபுக் குழுவின் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிய வருகிறது.

கிழக்கில் சுமுகநிலையை ஏற்படுத்தல் மற்றும் பாதுகாப்பைப் பலப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவப் புலனாய்வாளர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக்காலை 10 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இறந்தவர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் வசந்த கொலம்பகே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,


இறந்த இராணுவச் சிப்பாய் தனது விடுமுறையை முடித்தபின்னர் பொலநறுவையிலிருந்து மட்டக்களப்பிற்கு தனியார் பஸ் ஒன்றில் திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே சம்பவம் நடைபெற்றதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பயணம் செய்த பஸ் மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் நின்றபோதே சுடப்பட்டாரெனவும் சுட்டவரும் அதே பஸ்ஸிலேயே பயணத்தை மேற்கொண்டிருந்தார் எனவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் - படையினர் திருமலையில் நேற்று சந்திப்பு!



(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக்காலை திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் சார்பில்- திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், முன்னாள் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.திலக், நிர்வாகப் பொறுப்பாளர் மலரோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொலிஸார் தரப்பில் பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சம்பவங்களால் யுத்த நிறுத்தத்துக்கு ஆபத்து!

### கண்காணிப்புக்குழு பிரதித் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

ரமும் இல்லை என போர் நிறுத்தக்

மல்ல, ஒட்டுமொத்த சமாதான நட

# நோர்வே வெளியுறவு அமைச்சர் இன்று கொழும்பு வருகிறார்!



(கொழும்பு)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்ஸன் இன்று மாலை கொழும்புக்கு வரவுள்ளார்.

இவர் இன்று மாலையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபகஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல தென்னிலங்கை அரசியல் முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து நாளை அவர் வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

தொடரவிருக்கும் சமாதான முயற்சிகளில் ஏற்படக்கூடிய தடைகள், சிக்கல்கள் குறித்து ஆராயவே அவர் இங்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(01)

(கொழும்பு)

அண்மையில் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களை எங்களால் உறுதிசெய்ய முடியாது இதற்கு எங்களிடம் எந்தவித ஆதாரமும் இல்லை என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு நிலைமைகள் மோசமடைந்து வருகின்றது. இது போர் நிறுத்தத்தை மீறும் செயல் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமாதான நடவடிக்கைகளுக்கு விளைவிக்கக் கூடிய செயலாகும்.

ஆகவே - நாங்கள் ஒரு அறிக்கை பிரசுரிக்க இருக்கின்றோம். அதில் இரு தரப்பும் ஒன்றிணைந்து இந்தப் பாதக செயலுக்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பஸ் விபத்தில் யாழ். வாசிகள் மரணம்

கொழும்பில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வான் - பஸ் விபத்தில் யாழ்.வாசிகள் இருவர், துடிதுடித்து மரணமடைந்த பரிதாப சம்பவம் ஒன்று கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது.

கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு வெளிநாட்டிலிருந்து வரவிருந்த தமது உறவினரை அழைத்து வருவதற்காக, வானில் சென்றவர்களை- எதிரில் வந்த பஸ் மோதியதிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் அமெரிக்காவுக்கு இன்று பயணம்!

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்து இருதரப்பு உறவுகள் மற்றும் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுக்களை நடத்த இருகின்றார்.

தனது அமெரிக்க விஜயத்தின் போது- அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின்பவலையும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கலாநிதி கொண்டோ லிசா ரைஸ் ஐயும் சந்தித்துப் பேசுவார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமான பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட இருக்கின்றது. அரசாங்கத்தின் கொள்கைகள் சம்பந்தமாக அமெரிக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)


பதிப்புலக வேந்தர்களே!

முதன் முதலில் வடபகுதியில் மட்டுமன்றி இலங்கையிலேயே ROLER IMAGE SETTER - COLOUR SEPARATION
கலர் பிரித்தல் சேவையை அறிமுகப்படுத்துகின்றோம்.

நிலா பதிப்பகம்




- COLOUR SEPARATION SERVICE
  அனைத்து அளவுகளிலும் செய்து கொடுக்கப்படும்
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை
  (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை
  4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை
  HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல்
  (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE




பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

# மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட அணி யாழில் வைத்து கௌரவிக்கப்பட்டது

அகில இலங்கைரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மன்னார் மாவட்ட பள்ளிமுனை சென்லூசியா அணியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு யாழ்.உதைபந்தாட்டலீக் தலைவர் அன்ரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவாஜிலிங்கம், கஜேந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுபபாளர் பாப்பா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மன்னார் மாவட்ட பள்ளிமுனை சென்லூசியா அணியினர் [illegible] பெற்றுக்கொண்ட வெற்றிக் கிண்ணத்தினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவிடம் ஒப்படைத்தனர்.

வெற்றிபெற்ற இந்த அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், நலன் விரும்பிகள் எனப் பலரும் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். தொடர்ந்து பாடுமீன் விளையாட்டுக் கழகத்துடன் மன்னார் சென்லூசியா - சிநேகபூர்வமான உதைபந்தாட்ட நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேறபட்ட ரசிகர்கள் கலந்துகொண்டனர். இந்த ஆட்டத்தில் 1-0 என்ற அடிப்படையில் மன்னார் அணி, பாடுமீன் அணியைத் தோற்கடித்தது.

# மருந்தகமும் மகப்பேற்று விடுதியும் கட்டுடையில் அமைக்கப்படும்

## அரச அதிபர் நடவடிக்கை

(சுதுமலை)

கட்டுடைப்பகுதியில் இலவசமாக வழங்கப்பட்ட காணியில் மத்திய மருந்தகமும், மகப்பேற்று நிலையமும் அமைக்கப்படவுள்ளது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் இதற்கான நட்வடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். நவீன முறையில் மத்திய மருந்தகத்தையும், மகப்பேற்று நிலையத்தையும் அமைக்க நிகொட் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டுடையில் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்திற்கான 25 பரப்புக் காணியை மானிப்பாய் சட்டத்தரணி இரா. வசந்தசேனன் இலவசமாக வழங்கவுள்ளார்.

மேற்படி கட்டடத்திற்கென கடந்த ஆண்டு யு.என்.டி.பி நிறுவனத்தால் மூன்று மில்லியன் ரூபா அனுப்பியுள்ளபோதும் ஆரம்பவேலைகள் இடம்பெறாமையால் நிதி திரும்பியுள்ளது. மிகவிரைவில் இந்தக் கட்டத்திற்கான கட்டட பணிகள் இடம்பெறவுள்ளதாக தெரியவருகிறது. (91)

# ஆறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் சூரியன் கலட்டி மயானம் திருத்தப்படும்

(சுதுமலை)

மானிப்பாய் வலி - தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முள்ளானை கிராப்பிட்டி மயானம் (சூரியன் கலட்டி) புனரமைக்கப்படவுள்ளது. நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள, இந்த மயானத்தை தொடர் ஆறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் சிரமதானப் பணிகள் மூலமாக புனரமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி முதல இந்தப் பணி இடம்பெறவுள்ளது.

பண்டத்தரிப்பு பட்டணம், பண்டத்தரிப்பு கிராம சுகாதாரப்பகுதி அலுவலர்கள், முன்னாள் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் கை.செகராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தச் சிரமதானத்தில் அந்தப்பகுதி மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலி தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் பதின்மூன்று மயானங்கள் உள்ளன. இவற்றில் முதல் கட்டமாகவே முள்ளானை கிராப்பிட்டி மயானம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

# மருந்தடித்த மரக்கறிகள் சந்தைகளில் விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பயிர்ச்செய்கையாளர், மருந்தடித்த மரக்கறிகளை உடன்சந்தையில் விற்பனை செய்வதால், அவற்றை உட்கொள்ளும் மக்கள் பக்கவிளைவுகளுக்கு உட்படுவதாக சுகாதார வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் இவ்வாறான பக்கவிளைவுகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

சில விவசாயிகள் மரக்கறி வகைகளுக்கு மாலைவேளைகளில் மருந்தடித்துவிட்டு, மறுநாள் காலை அவற்றைச் சந்தைப்படுத்துவதைக் காண முடிகிறது.

இவ்வாறு மருந்தடிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படும் மரக்கறி வகையை உண்ணுவோர் பல்வேறு பக்கவிளைவுகளுக்கு உட்படுவதுடன், நோய்களுக்கு ஆளாகவேண்டியும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.மாநகரசபை பகுதியில்

# வளர்ப்பு நாய்களுக்கான விசர்நாய் தடுப்பு மருந்து ஏற்றல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மூன்றாம் கட்ட விசர்நாய் தடுப்பு மருந்து நாளை முதல் நான்கு தினங்கள் ஏற்றப்படவுள்ளதாக சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நல்லூர்ப் பகுதியில் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய் நல்லூர் சிகிச்சை நிலையத்தில் 8.30 மணிக்கும், மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தில் 11 மணிக்கும், சங்கிலியன் பொதுப்பணி மண்டபத்தில் 2 மணிக்கும் தடுப்பூசி ஏற்றப்படும். 12 ஆம் திகதி புதன் அன்று கொண்டலடி சனசமூக நில்லையத்தில் 8.30 ம்ணிக்கும், வண்ணார் பண்ணைப்பகுதியில் வள்ளுவர் சனசமூக நிலையத்தில் 11 மணிக்கும், காமாட்சி சனசமூக நிலையத்தில் 2 மணிக்கும் தடுப்பூசி ஏற்றப்படும்.

மறுநாள் வியாழன் அத்தியடி சனசமூக நிலையத்தில் காலை 8.30 மணிக்கும், நீராவியடி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 11 மணிக்கும், வேம்படி சனசமூக நிலையத்தில் பி.ப 2 மணிக்கும் தடுப்பூசி ஏற்றப்படும். செவ்வாய் கலைவாணி சனசமூக நிலையத்தில் காலை 8.30 மணிக்கும், ஒஸ்மானியா கல்லூரி அருகாமையில் 11 மணிக்கும் தடுப்பூசி ஏற்றப்படும்.

குறித்த நிலையங்களில் தங்கள் நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அ.மரியதாசன் கேட்டுள்ளார்.

## சுற்றாடல் தினத்தையொட்டி

# பாடசாலை மாணவர்களிடையே கீதம் இசைத்தல் போட்டி

சர்வதேச சுற்றாடல் தினத்தை ஒட்டி யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே கீதம் இசைத்தல், பாவோதல் போட்டிகள் நடாத்தப்பட்டது.

இந்தப் போட்டியில், யாழ்.பரியோவான் கல்லூரி மாணவர்குழு முதலாம் இடத்தையும், யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் தா.ஜெயடினேஸ் இரண்டாம் இடத்தையும், யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்குழு மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

# நகரசபை, சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 27.05.2004 ஆம் திகதி முதல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 05 வரையிலான வேலைகளின் பொருட்டு நிர்மாணப்பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) "தரம் எம் 9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரும் 06 ஆவது வேலையின் பொருட்டு "இக்ராட் தரம் 7 " அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூ. சதம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம்(வற்றுடன்) ரூ. சதம் |
|---|---|---|---|
| 01 | புகையிரத நிலைய வீதித் திருத்தம் | 2,500. 00 | 575. 00 |
| 02. | அம்மன் வீதி 1 ஆம் ஒழுங்கைத் திருத்தம் | 1,500. 00 | 575. 00 |
| 03. | வேலாயுதம்பிள்ளை வீதித் திருத்தம் | 2,500. 00 | 575. 00 |
| 04. | பிலான் ஒழுங்கை மதவு அமைத்தல் | 2,000. 00 | 575. 00 |
| 05. | நவீன சந்தைக் கட்டிட மேல்மாடி மண்டபம் பிரிவிடுதலும், தட்டைசீற் பொருத்துதலும், உள்ளக மின்னிணைப்புச் செய்தலும் | 8,000. 00 | 575. 00 |
| 06. | அலுவலகக் கட்டிட்ம் திருத்தம் (கட்டம் 1) | 30,000. 00 | 575. 00 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 25.05.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மேற்குறித்த கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப் படிவக்கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம" என்ற முகவரிக்கும் 27.05.2004 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**நகரசபை அலுவலகம்,**
**சாவகச்சேரி.**
06.05.2004.

**மு.செ.சரவணபவ,**
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

சி-2511

# பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கிவரும் எமது பதிப்பகத்திற்கு பக்கவடிமைப்பாளர்கள், தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அகவை எல்லை :- 18-45 வயதுவரை

முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**Corel Draw, Page Maker, Photoshop,**

என்பன தெரிந்திருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிட வசதி இலவசமாகச் செய்துகொடுக்கப்படும்.

தகுதியுடையோர் எதிர்வரும் 12-05-2004 புதன்கிழமை காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் வருகை தரவும்.

தொடர்புகளுக்கு -
**நிலா பதிப்பகம்**
**புகையிரத நிலைய வீதி,**
**கிளிநொச்சி.**

தொ.பேசி :- 021-2285935
தொலைநகல்- 021-2285935

(சி/2512)


**ராஜா** யாழ்ப்பாணம்.

4 ஆவது வாரமாக
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த

**கில்லி**



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
20 ஆம் திகதி முதல்
ஆயுதஎழுத்து
(சி-2387)

**நாகம்ஸ்** சுன்னாகம்

2 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி,
வடிவேலு நடித்த



**அருள்** (றீல்ஸ்)
(சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


## சிறுவிளம்பரம்

### தட்டச்சு வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறுகின்றது.

தொடர்பு : N.S.T.C.A,
8/1 அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(728)


**நிறஞ்சனாஸ்** சங்கானை

கமல், அபிராமி, நெப்போலியன்
நடித்த
**விருமாண்டி**
(சி-2386)

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)
Hell bound Hell Raiser - 02

# மாவட்டத்தின் நேரடிக் கண்காணிப்பில் அனைத்துப் பிரிவுகளும் இயங்கும்!

## திருகோணமலை அரசியல் பொறுப்பாளர் எழிலன்



(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நேற்றுமுன்தினம் இரவு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

மாவட்டத்தின் புதிய அரசியற் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு திருகோணமலை அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் முன்னாள் பொறுப்பாளர் சி.திலக் முதலில் எழிலனைப் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப் படுத்தியதன் பின்னர் இதுவரை தமக்கு வழங்கிவந்த ஒத்துழைப்பை புதிய பொறுப்பாளருக்கும் தொடர்ந்தும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் மாவட்டத்தின் புதிய அரசியற் துறைகிளைச் செயலாளரும் நிர்வாகப் பொறுப்பாளருமான மலரோனும் கலந்துகொண்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய எழிலன் -

அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபடும் பொறுப்பாளர்களுக்கு உள்ளக இடமாற்றங்கள் நடைபெறுவது வழமை. அந்த வழமையின் நடைமுறைக்கு இணங்க எமது இடமாற்றம் நடைபெற்றுள்ளது.

தமிழீழ பிரதேசம் முழுவதும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அடிப் படையில் பொறுப்பாளர்கள் இடமாற்றப்பட்டுள்ளார்கள். அத்தகைய ஒரு திட்டத்தின் அடிப்படையில் திருமலை மாவட்ட இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கட்டம் கட்டமாக எமது செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு இத்தகைய மாற்றங்கள் அவசியமாக உள்ளது.

கருணா விவகாரத்திற்கும் திருமலை மாவட்ட இடமாற்றங்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்று குறிப்பிட்டார்.

புதிய இடமாற்றங்கள் குறித்து கூறிய திலக் -

இயக்கத்தில் இத்தகைய இடமாற்றங்கள் வழமையானது. ஒரு காலகட்டத்தில் எல்லாமே மாற்றப்படும். அந்த அடிப்படையிலேயே இந்த மாற்றங்களும் நடைபெற்றுள்ளது. இதனைவிட வேறு விசேடமாக எந்தகாரணங்களும் இந்த இடமாற்றத்தில் இல்லை என்பதை தெளிவாகக் கூறவிரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எழிலன் - கருணாவின் பிரச்சினை ஏற்பட்ட காலப்பகுதியிலேயே மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் கிளிநொச்சிக்கு மாற்றப் பட்டார். பொதுத்தேர்லைத் தொடர்ந்து அது நடந்தது. அடுத்து நான் தற்போது வவுனியாவிலிருந்து திருமலைக்கு மாற்றப்பட்டேன். இவை அனைத்தும் புதிய நிர்வாக ஒழுங்கமைப்பின்படியே நிகழ்ந்தனவே தவிர, வேறு விசேட காரணங்கள் ஏதும் இல்லை.

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி பொறுப்புக் குறித்து இதுவரை தலைமை முடிவெதுவும் மேற்கொள்ளவில்லை.

தற்போதைய மாற்றங்கள் தற்காலிகமானவை.

இதுவரை திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் நிர்வாகக் கட்டமைப்பு பிரதேசத்தின் தேவைகருதி மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எதிர்வரும் காலத்தில் தமிழீழ நிர்வாகக் கட்டமைப்பு ஒவ்வொரு பிரிவுகளின் நேரடி ஒழுங்கமைப்பு மாவட்டந்தோறும் நிறுவப்படும்.

நேரடியாகத் தேசிய நிர்வாகப் பொறுப்பாளர்களின் கண்காணிப்பிலும், கட்டுப்பாட்டிலும் இப்பிரிவுகளின் மாவட்டப் பொறுப்பாளர்கள் இயங்குவர்.

மாவட்டத்திற்குள் அரசியற்துறையில் சில புதிய மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. கும்புறுபிட்டி கோட்டப் பொறுப்பாளர் சிவகுமார். நகரப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோன்று மூதூர் கிழக்குப் பகுதிக்கு நளினி என்ற போராளி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய கோட்டப் பொறுப்பாளர்களில் தற்போதைக்கு மாற்றங்கள் இல்லை.

போராட்ட காலத்திலும், சமாதான காலத்திலும் எமது ஊடகங்கள் எமக்கு வழங்கிவரும் நடுநிலையான ஆதரவு குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மாவட்ட அலுவலகத்தில் ஊடகப் பொறுப்பாளர் ஒருவரை நியமிக்கவுள்ளோம். இவர் ஊடகங்களுக்கும, எமக்கும் இடையில் இணைப்பாளராகச் செயற்படுவார் என்று குறிப்பிட்டர். நேற்றுமுன் தினம் மாலை 8 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு ஏறத்தாழ 9.30 மணி வரை நீடித்தது. (10)

## சிவராம் வீடு சோதனையிட்டமை குறித்து வெளிப்படையாக எதுவும் கூறமுடியாது!

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

இராணுவ ஆய்வாளர் சிவராமின் வீட்டில் தேடுதல் நடத்தப்பட்டதற்கான காரணம் குறித்து வெளிப்படையாகத் தெரிவிக்கமுடியாதென பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஊடகவியலாளர் சிவராமின் இலலத்தில் நடத்தப்பட்ட தேடுதல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தொடரப்பட்டிருப்பது குறித்து கொழும்பு ஊடகமொன்று தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவில்லாமல் ஊடகவியலாளரின் வீட்டில் தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தே ஊடகவியலாளர் ஒன்றியத்தினர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்த கருத்தை பொலிஸ் மா அதிபர் மறுத்துள்ளார்.

இதேவேளை சிவராமின் இல்லத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிககையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர்.



திருமலை மாவட்ட புதிய அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பேற்ற எழிலன் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் திலக், மலரோன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (04)

## அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு ஜே.வி.பி முயற்சிக்கின்றது!

### ராஜித சேனாரட்ன குற்றச்சாட்டு

இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி அதிகாரத்தைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஜே.வி.பி ஈடுபட்டுவருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேரானரத்ன தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளமுடியாதெனக் கூறி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நோர்வேயின் சமாதான நடவடிக்க்கைகளை கடுமையாக எதிர்த்துவந்த ஜே.வி.பி - இன்று தமதுகையில் ஆட்சி வந்ததும் அது தொடர்பாக மௌனம் சாதிப்பது எமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு உலங்கு வானூர்தி சேவை வழங்கப்பட்டதை கடுமையாக விமர்சித்த ஜே.வி.பியினர் தற்போது விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோச்கர் அன்ரன் பாலசிங்கத்துக்கு உலங்கு வானூர்தி சேவை வழங்கப்படுவது குறித்து மௌனம் சாதித்துவருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியின் இந்த திடீர் மாற்றம் உண்மையாகவே அவர்கள் சமாதானத்தை விரும்புவதன் வெளிபபாடாக இருந்தால் அதனைத் தாம் வரவேற்பதாகவும் - இனப்பிரச்சினைத் தீர்வுமுயற்சிகளைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வருவதற்கு ஜே.வி.பி முயலுமானால் அது வேதனைக்குரிய ஒரு விடயமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

### சமாதான முயற்சிகளுக்கு பிரதமர் தலைமையில் குழு!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஜே.வி.பியின் பிரதிநிதி ஒருவரும் உள்ளடக்கப்படுவார்.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்தபோது இதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டதாகச் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது ஐக்கிய தேசியக்கட்சி அரசு முன்னர் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியது போன்று நீண்ட காலத்தில் பேச்சுக்களை நடத்தாது குறுகிய காலத்தில் பேச்சுக்கள் நடாத்தப்படும் என்றும் -

இதற்கான புதிய நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் என்றும் - அத்துடன் தாம் தனித்து எந்த முடிவையும் எடுககப்போவதில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்ததாக சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

## விமான சேவைகள் வழமைக்குத் திரும்பின

(கொழும்பு)

சிறிலங்கன் எயார் லைன்ஸ் ஊழியர்கள் இரண்டு நாட்களாக மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம், நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியுடன் முடிவுக்கு வந்ததையடுத்து விமானசேவைகள் வழமைக்குத் திரும்பின.

கடந்த வெள்ளி நண்பகல் 12 மணிமுதல் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டுவந்த சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தில் சுமார் 600 ஊழியர்கள் - நேற்றுமுன்தினம் முகாமைத்துவத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர். விமானப் போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீர - ஊழியர்களின் முறைப்பாடு தொடர்பாக தீர்வுகாண நேரிடையாகத் தலையிடுவதாக உறுதியளித்ததையடுத்தே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

வேலைநிறுத்தத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலுக்குப் பின்னர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடான விமானப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் விமான சேவைகள் வழமைக்குத் திரும்பின. (01)

## திருமலையில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார்!

திருகோணமலை தம்பலகாமத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த தர்மராசா என்று அழைக்கப்படும் செல்வராசா குணசீலன் (வயது 28) என்பவரே சுடப்பட்டு மரணமடைந்தார்.

திருகோணமலை நகரிலிருந்து 15 மைல்களுக்கு அப்பால் உள்ள பத்தினிபுரம் பிரதான வீதிக்கருகில் இந்தச் சடலம் தலையில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 6 மணியளவில் பொதுமக்கள் அளித்த தகவலையடுத்து - தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொலிஸார் சடலத்தைச் சென்று பார்வையிட்டபின் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அங்கு சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பனர்கள் சடலத்தைப் பார்வையிட்டனர்.

'கருணா குழுவிற்கு துணை போனவர்' என்று எழுதப்பட்ட ஒரு சிறு சிட்டை இறந்தவரின் சட்டைப் பையில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டது.

அத்துடன் செல்வராஜா குணசீலன், வாழைச்சேனை, பாடசாலை ஒழுங்கை என்று குறிப்பிடப்பட்ட தேசிய அடையாள அட்டையும் சட்டைப்பையில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவர் ஏன் பத்தினிபுரத்திற்கு வந்தார் என்பதோ? யார் இவரைச் சுட்டுக் கொன்றனர் என்பதோ இதுவரை அறியப் படவில்லை.

ஆரம்பக்கட்ட விசாரணையை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (10) (01)


## வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்றவர் கைது

வெளிநாட்டு நாணயங்களை இலங்கையில் இருந்து கடத்த முயன்ற இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

16.9 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நேற்றுமுன்தினம் கடத்த முற்பட்ட வேளையிலேயே சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால், இவர் கைதுசெய்யப்பட்டார்.

தனது பயணப்பொதியினுள் மறைத்து வைத்து, சிங்கப்பூருக்கு இந்த நாணயங்களைக் கடத்த முற்பட்டபோதே இவர் கைதுசெய்யப்பட்டதாக, சுங்கத் திணைக்களப் பிரதி மேற்பார்வையாளர் கபிலா அல்விஸ் தெரிவித்தார்.

இந்த நாணயங்களில் - யூரோ, ஸ்ரேலிங் பவுண், யென் போன்ற நாணயங்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



# சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்டில் இலங்கை அணி இனிங்சால் வெற்றி

(ஹராரே)

இலங்கை கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுபபயணம் செய்து விளையாடிவருகின்றது. இரு அணிகளிடையேயான ஒருநாள் தொடரை இலங்கை 5-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரண்டு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் முதல் டெஸ்ட் ஹராரேயில் நடந்தது.

சிம்பாப்வே முதல் இனிங்சில் 199 ஓட்டங்களுடன் சுருண்டது. இலங்கை அணி முதல் இனிங்சில் 541 ஓட்டங்களைக் குவித்தது. கப்டன் அத்தப்பத்து 170 ஓட்டமும், ஜெயசூரிய 157 ஓட்டங்களும் பெற்றனர்.

342 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் சிம்பாப்வே இரண்டாவது இனிங்சை ஆடியது. சொய்சாவின் அபாரப்பந்துவீச்சால் விக்கெட்டுக்கள் சரிந்தன. அந்த அணி 102 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் இலங்கை இனிங்ஸ் மற்றும் 240 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டம் மூன்று தினங்களிலேயே முடிந்து விட்டது. சொய்சா 5 விக்கெட்டும், முரளி 2 விக்கெட்டும், வாஸ், ம.்.ப், ஜெயசூரிய ஆகியோர் தலா ஒருவிக்கெட்டும் எடுத்தனர்.

என்காலாவின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் இலங்கை வீரர் முரளிதரன் புதிய உலக சாதனை படைத்தார். இது அவரது 520 ஆவது விக்கெட் ஆகும். இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகள் வீரர் வோல்ஷ் 519 ஆவது விக்கெட்டுக்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது.

புதுமுக வீரர்களைக்கொண்ட சிம்பாப்வே அணி இலங்கையிடம் திணறிவருகின்றது.

இரு அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி தொடங்குகிறது.

# இந்திப்படத்தில் நடிக்க வசீம் அக்ரம் மறுப்பு



பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் சிறந்த சகலதுறை ஆட்டக்காரரான இவர் ஓய்வுக்குப் பிறகு இ.எஸ்.பி.என். தொலைக்காட்சியின் வர்ணனையாளராகப் பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் வசீம் அக்ரமை இந்திப் படத்தில் நடிக்கவைக்க வேண்டும் என்றும் பிரபல இயக்குநர் மகேஸ்பட் கேட்டுக்கொண்டார்.

ஆனால், இதை ஏற்க வசீம் அக்ரம் மறுத்துவிட்டார். தொலைக்காட்சி வர்ணனையாளராகத் தொடர்ந்து இருக்க விரும்புவதாகவும் - படத்தில தான் நடிக்க விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# அக்தர் மீது நடவழக்கையில்லை; எச்சரிக்கையுடன் தப்பினார்!

(ஹராரே)

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான சொகைப் அக்தர், இந்தியாவுக்கு எதிரான ராவல்பிண்டி டெஸ்டில் காயம் அடைந்ததால் முழுமையாகப் பந்துவீசவில்லை.

ஆனால், எதிர்பாராத அளவுக்கு துடுப்பாட்டத்தில் பிரகாசித்தார். இதைத் தொடர்ந்து இவரது காயம் குறித்து சர்ச்சை கிளப்பப்பட்டது. இதைத்தொடர்ந்து அக்தரிடம் விசாரணை நடத்த மருத்துவக்குழு ஒன்றை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்தது. இந்தக்குழு அக்தரிடம் மருத்துவ சோதனை நடத்தியது.

அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கையில் அக்தருக்குக் காயம் ஏற்பட்டது உண்மைதான் என்று தெரியவந்தது.

இதற்காக அக்தர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எச்சரிக்கையோடு அவர் தப்பினார். இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் சகாரியன் கான் கூறும்போது -

'அக்தர் மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்று முடிவு செய்துள்ளோம். அதேநேரம் அவரைக் கடுமையாக எச்சரிக்கின்றோம்.

இனி அவர் இப்படிக் காயத்தால் முறைப்படி சொல்லாமல் ஆடவில்லை என்றால் நடவடிக்கை எடுப்போம்' என்றார்.



## விளையாட்டு





தேசிய மட்டத்தில் உதைபந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மன்னார் பள்ளிமுனை சென் லூசியா அணியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றபோது, தேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தேசியக் கொடியை ஏற்றுவதையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அணிவீரர்கள் மௌன அஞ்சலி செலுத்துவதையும், வெற்றிக் கிண்ணத்தை லூசியா உதைபந்தாட்ட கழகத் தலைவர், பாப்பாவிடம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# தொங்கு நாடாளுமன்றம் உருவானால் பா.ஜனதா கூட்டணிக்கு ஆரவில்லை!

## சரத் பவாரின் கட்சி அறிவிப்பு

தொங்கு நாடாளுமன்றம் உருவானால் பா.ஜனதா கூட்டணியை ஆதரிக்க மாட்டோம் என்று சரத் பவார் கட்சி அறிவித்துள்ளது. சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் பொதுச் செயலாளர் தாரிக் அன்வர் டெல்கியில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது-

இந்தத் தேர்தலில் தொங்கு நாடாளுமன்றம் உருவானால் புதிய ஆட்சி அமைப்பதில் எங்கள் கட்சி முக்கிய பங்கு வகிக்கும். எந்த வகையிலும் பா.ஜனதா கூட்டணியை ஆதரிக்க மாட்டோம். அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

மதசார்பற்ற அணிக்கு தலைமை ஏற்பது யார் என்பதை தேர்தல் முடிவுகள் வெளியான (13 ஆம் திகதிக்கு) பிறகு முடிவு செய்வோம். கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் ஒன்றாகக் கூடிப்பேசுவோம் என தாரிக் அன்வர் கூறினார். தலைமை ஏற்கும் பிரச்சினையில் காங்கிரஸ் தனது பாதையை மாற்றப்படுவதாகக் கூறப்படுகின்றதே? என்று கேட்டபோது - அதற்கு அவர், கூட்டணிக் கட்சிகள் எடுக்கும் முடிவை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். ஒரு தலைப்பட்சமின்றி முடிவு எடுப்போம் என்றார்.

# ஹெலியின் காற்றாடியில் சிக்கி விமானியின் தலை துண்டானது!

மத்திய அமைச்சர் தேர்தல் பிரசார சுற்றுப் பயணத்தின் போது ஹெலிகொப்ரர் காற்றாடியில் சிக்கிய விமானியின் தலை துண்டிக்கப்பட்டு பலியானார்.

மத்திய விவசாய அமைச்சர் ராஜ்நாத் சிங் உத்தராஞ்சல் மாநிலத்தில் இறுதிக்கட்ட தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். இதற்காக ஹெலிகொப்ரர் ஒன்றை அவர் வாடகைக்கு அமர்த்தியிருந்தார்.

உத்தம்சிங் நகர்பகுதி மைதானத்தில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசிக்கொண்டிருந்தார். தேர்தல் பிரசார அனுமதி நேரத்துக்கு முன்னதாக சகரன்பூர் பொதுக்கூட்டத்திற்கு செல்வதற்காக ஹெலிகொப்ரர் தயார் நிலையில் அருகே நின்றுகொண்டிருந்தது.

அப்போது ஹெலிகொப்ரரின் காற்றாடிக்கு அருகே பின்பக்கத்தில் இருந்து புகைவந்தது. அதைச் சரி செய்வதற்காக விமானி கப்டன் அனில் நக்ரா அந்தப் பகுதிக்குச் சென்றார்.

அப்போது எதிர்பாராத விதமாக வேகமாக சுழன்றுகொண்டிருந்த காற்றாடியின் இறக்கையில் சிக்கிய நக்ரா தலை துண்டிக்கப்பட்டு பலியானார். இந்த விபத்தால் அதிர்ச்சியடைந்த அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது அடுத்த பொதுக் கூட்ட நிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டு கார் மூலம் டெல்கி புறப்பட்டுச் சென்றார்.

இதற்கிடையில் இந்த மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த உபி முதல்மந்திரி முலாயம்சிங் யாதவின் ஹெலி கொப்ரரிலும் நேற்று தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.

# வாரிசு அரசியலுக்கு முடிவுகாணுமாறு மக்களை கேட்கின்றார் வாஜ்பாய்!

வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டுங்கள் என்று பிரதமர் வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் நடந்த இறுதிக்கட்ட பிரசார கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய் பேசும்போது கூறியதாவது,

நமது எதிர்க்கட்சிகள் எதையும் நிரூபிக்காமல் குற்றம் சுமத்தி வருகிறார்கள். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது எதிர்க்க வேண்டும் என்பதற்காக, ஒருபோதும் எதிர்த்துக் கொண்டு இருந்தது இல்லை. ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பாராட்டியிருக்கிறோம்.

வேறு யாருக்கும் நாட்டை ஆளும் உரிமை இல்லை. தங்களுக்கு மட்டுமே அதிகாரம் இருக்கிறது என்று அவர்கள் நினைப்பது ஏற்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட யாரும் நாட்டை ஆளலாம். வாரிசு அரசியலுக்கு முடிவுகட்டவேண்டும்.




பாரதீய ஜனதாவை தோற்கடிக்கவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் செயற்படும் அவர்களது எதிர்மறை செயற்பாட்டை மக்கள் நிராகரித்துவிட்டனர். இவ்வாறு பிரதமர் வாஜ்பாய் பேசினார்.



இறுதிக்கட்ட பிரசாரத்தில் சோனியாகாந்தி ஈடுபட்டிருந்தபோது...

# ரஜினி பிரசார ஒலிநாடாக்கள் பொலிஸாரால் பறிமுதல்

தமிழகம் சேலம் மாவட்டம் ஓமலூர்ப் பகுதியில் ரஜினி ரசிகர்களின் ஒலிநாடாக்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

ரஜினி ரசிகர்கள் வெளியிட்ட பிரசார ஒலிநாடாக்களை சேலம் மாவட்டப் பொலிஸார் பறிமுதல் செய்து வருகின்றார். சமீபத்தில் தாரமங்கலம், மேட்டூர்ப் பகுதிகளில் அரசு பேரூந்துகளில் பிரசாரத்திற்காக நியமிக்கப்பட்ட ஒலிநாடாக்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இந்தநிலையில் ஓமலூர்ப் பகுதியில் ரஜினி ரசிகர்கள் பிரசாரத்துக்குப் பயன்படுத்தி ஒலிநாடாக்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். 500 ஒலிநாடாக்களை பொலிஸார் ரசிகர்களிடம் இருந்து பறித்துச் சென்றனர்.

### வலி. வடக்குப் பிரதேசத்தில்

# உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றி மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுங்கள்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர்

(வடமராட்சி)

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி, அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

பலாலி, மயிலிட்டி, காங்கேசன் துறை, தையிட்டி மக்கள் கையொப்பம் இட்டு அனுப்பிவைத்துள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

1990 ஆம் ஆண்டு மேற்படி இடங்களிலிருந்து, இடம்பெயர்ந்துள்ள- பருத்தித்துறை, சக்கோட்டை, வியாபாரிமூலை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் தங்கியுள்ளோம்,

பல்வேறு கஸ்ரங்களுக்கும் மத்தியில் தொழில் வசதிகளின்றி வாழந்து வருகின்றோம்.

நாம் இடம்பெயர்ந்துள்ள மேற்படி பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு, உயர்பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த முகாம்களை அகற்றியும், உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கி சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் என, அந்த மகஜரில் கோரிககை விடுக்கப்பட்டுள்ளது. (17)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்க, மானிப்பாய் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. முதற் கட்டமாக ஆனைக்கோட்டை, கூழாவடி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் நாளை அழிக்கப்படவுள்ளன.

வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்த்து தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கூழாவடி பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (44)

## வடமராட்சி மீனவர்களுக்கு இயந்திரம் திருத்தல் பயிற்சி

(ஆழியவளை)

வடமராட்சிக்கு வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பரப்பிற்கு உட்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 41 கடற்றொழிலாளர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரம் திருத்தல் சம்பந்தமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனமும், போரூட் நிறுவனமும் கூட்டாக இணைந்து இந்தப் பயிற்சி நெறியினை வழங்கியுள்ளனர்.

பயிற்சி நெறியைப் பெற்ற ஒவ்வொரு கடற்றொழிலாளர்களுக்கும் 5 ஆயிரத்தி 190 ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொண்ட பொதிகள் மேற்படி நிறுவகங்களால் வழங்கப்பட்டன. (122)

### வட- கிழக்கு பாடசாலைகளில்

## பார்வை குறைபாடுடைய மாணவருக்கு கட்புல சாதனங்கள் வழங்க நடவடிக்கை

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் வகுப்புக்களில் கல்விகற்கும் பார்வை குறைபாடு உடைய மாணவர்களுக்குக் கட்புல சாதனங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி குறைபாடு உடைய மாணவர்களின் விபரங்கள் - பாடசாலை அதிபர்களினூடாக வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் திரட்டப்பட்டுவருகின்றது.

கட்புலன் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. கட்புலனற்ற மாணவர்கள் மேற்படி உபகரணங்களைப் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து, மாணவர்களின் இடர்பாடுகளை நிவர்த்திசெய்யும் பொருட்டு மாகாணக் கல்வித் திணைக்களம் கட்புலனற்றோர் சேவைச்சபையின் அனுசரணையுடன் விசேட சாதனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

### நெடுந்தீவு பிரதேசத்தில்

## உள்ளூர் போக்குவரத்துசேவை நான்கு தினங்கள் நடைபெறவில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தின் உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த வடபிராந்தியப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேரூந்து கடந்த 4 நாட்களாக திருத்தவேலை காரணமாகச் சேவையில் ஈடுபடவில்லை.

பேரூந்தின் ஒரு சில்லு காற்றுப் போய்விட்டதாகவும், இது தொடர்பாகத் தொலைபேசி மூலமும், பேரூந்து ஓட்டுநர் நேரடியாகவும் உயர் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடல்தாண்டிவரும் பிரதேசமாக இந்தப் பிரதேசம் அமைந்துள்ளதால், இங்கே மேலதிக சில்லுகள் அவசிய தேவைகள் கருதி வைக்கப்பட்டிருக்குமாயின் இவ்வாறு பல நாட்கள் - ஒரு சிறிய திருத்த வேலை காரணமாகச் சேவை இடம்பெறாதிருக்காதென்பது அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளார். (113)




தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட கண்காட்சியின்போது, மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாபாலன் மற்றும் மாதர் சங்கத்தின் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.

## மீனவர்கள் மீதான கெடுபிடிகளை நீக்கத்தவறின் வெகுஜன போராட்டத்தை நடத்த நடவடிக்கை

### கடற்தொழில் சம்மேளன செயலாளர் எச்சரிக்கை

கடற்தொழிலாளர்கள் மீது கடற்படையினரால் தொடரப்படுகின்ற கெடுபிடிகள் நிறுத்தப்படாவிட்டால், பல்லாயிரக்கணக்கான கடற்தொழிலாளர்களை ஒன்றிணைத்து, வெகுஜனப் போராட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமென, யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளன செயலாளர் க.சூரியகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வளம்மிக்க கடற்பரப்புக்களை உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கிவைக்கப்பட்டு எஞ்சிய பிரதேசங்களில் தொழில் புரியச்செல்லும் கடற்தொழிலாளர்கள்மீது பாஸ் நடைமுறை சோதனைக் கெடுபிடிகள், கடலுணவுகளைப் பறிமுதல் போன்ற அடாவடித்தனங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

யுத்தநிறுத்தம் அமுலில் உள் காலத்திலும் படையினர் பாதுகாப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை யுத்தநிறுத்த மீறலும், அடிப்படை மனித உரிமை மீறலாகவும் அமைந்துள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு புதிய அரசாங்கம் மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறின், கடற்தொழில் சமூகத்தை ஒன்றுதிரட்டி, வெகுஜன போராட்டம் நடத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (17)

## சர்வதேசம் புலிகளை அங்கீகரித்ததால்தான் கருணா மீதான தாக்குதலை எதிர்க்கவில்லை!

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவிப்பு

தமிழ் மக்களின் ஏகப்பிரதிகளான விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதனால்தான் கிழக்கிலிருந்து கருணாவை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை சர்வதேசம் எதிர்க்கவில்லை.

இவ்வாறு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியின் தேர்தல் செயற்பாட்டுக்குழு உறுப்பினர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது -

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள், தேசியத்தலைவர் பிரபாகரன் என்பதை சர்வதேசமும் உணர்ந்து கொள்ளும் வகையிலே தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு ஒரு அரசியற்பலத்தினை இப்பொதுத் தேர்தல்மூலம் பெற்றுள்ளோம்.

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு மனந்திறந்து பேசமுடியாத நிலையில் இருந்த மக்கள் - தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் பணிக்காகத் தீவகம் வந்ததுமே பெரும் எழுச்சியேற்பட்டு, மாற்றம் ஏற்பட்டு இன்று உச்சக்கட்டத்தில் நிற்கின்றது. மக்கள் மனங்கள் துணிந்து செயற்பட வழிவகுத்து வந்த விடுதலைப் புலிகளுக்குத் தான் நன்றி சொல்லவேண்டும். அவர்களது வருகைதான் எங்களது எழுச்சிக்கு பெரும் பலமாக இருந்தது.

திலீபனின் கனவான "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்ற இலக்கை அடையும் நாள் நெருங்கிவிட்டது. தேர்தலின் பின்னர் தமிழருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஒரு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது. அதன்மூலம்தான், கிழக்கிலே கருணாவை எதிர்த்து இராணுவ நடவடிக்கை எடுக்கும்போது, எந்த உலகநாடுமே எதிர்க்கவில்லை. இது ஒரு பயங்கரவாதச் செயல் என்றும் கூறவில்லை. நேரடியாக இராணுவம் கூட உதவுவதற்கு முன்வரவில்லை.

எங்களது இலக்குகள் முழுமையாகக் கிடைக்கும் வரைக்கும் முழுமூச்சுடன் நாம் உழைக்கவேண்டும். கடந்த காலத்தில் தீவகத்தில் இருந்து சுயநலப்போக்காக, தனி மனித செயலாகக் கிடைத்த முழு நிதியினையும் செலவிடாமல் சொந்தக் கணக்கில் வைப்பிலிட்டதை நாம் அறிவோம்.

இன்று இராணுவம் மக்களுடன் இணைந்த சிரமதானம், விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்வுகளை செய்ய முன்வருகின்றது.



இதற்கு நாமும் துணைபோவோமானால், இராணுவம் நினைத்தது போன்று நம்மை வசியப்படுத்தி, தம்முடன், மக்கள் நல்லுறவுடன் உள்ளதுபோல காட்டிக் கொள்வார்கள்.

இராணுவம் வெளியேறவேண்டும் எனக் கோரிக்கை விடும்போது மக்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டால் இது எந்தளவுக்குச் சாத்தியமாகும்.

எனவே, தமிழர்களாகிய நாங்கள் எங்கள் சுயகௌரவத்துடன் செயற்படுவதுடன் இலக்குகளை முழுமையாக அடையும்வரை தொடர்ந்து பாடுபடவேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (113)

## காணி அமைக்கும் முயற்சியை பிரதேச சபை கைவிட்டது

(சுதுமலை)

வலி.தென் மேற்குப் பிரதேச சபையினரால் அனுமதியின்றி தனியாரின் காணிக்குள் சந்தை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளது. கீரிமலை வீதி, சண்டிலிப்பாய் சூரிதோட்டம் என்ற இடத்தில் தனியாருக்குச் சொந்தமான காணியை அனுமதியின்றி பாவனைக்கு எடுத்தமை தொடர்பாகக் காணியின் உரிமையாளரின் உறவினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி இடத்தில் வலி.தென் மேற்குப் பிரதேசசபையின் அனுசரணையுடன் சந்தை அமைப்பதற்காகக் கொட்டில் அமைக்கப்பட்டு வந்தன.

இந்தச் சம்பவம்தொடர்பாக உரிமையாளரின் உறவினர் சட்டநடவடிக்கை எடுத்ததை அடுத்து, இடைநிறுத்தப்பட்டது.

இந்தக் காணியின் சொந்தக்காரர்கள் நீண்ட காலமாக வெளிநாட்டில் குடும்பமாக வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)



சிறுகதை

# எது நியாயம்?

அவர்கள் அகதிகளாக வந்து பல ஆண்டுகளாயின. மாலை வேளையில் கந்தப்பநகர், கருங்கல் பிள்ளையார் கோயில் வாசலில் பரவிக்கிடக்கும் வெண்மணல் மீது அமர்ந்து பலதும் பத்தும் பேசிக்கொள்வர். சமீபத்தில் வந்த எனக்கு அவர்களுடன் அவ்வளவாகப் பழக்கம் ஏற்படாததால் சற்று தூரத்தே அமர்ந்துகொள்வேன். நாளடைவில் அவர்களில் ஒருவனாக இணைந்துகொண்டேன். நாடு விட்டு நாடு வந்திருக்கும் அனைவரும் ஒரே மண்ணின் மைந்தர்கள். பல ஊர்களைச் சேர்ந்தவர்களாயினும் இங்கே தனி ஒரு சமூகமாகக் கணிக்கப்படுகின்றோம்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இடையில் சிலவேளை என் கருத்தையும் சொல்லுமளவுக்கு முன்னேறி அவர்களுடன் அருகே அமர்ந்துகொள்ளவும் முடிந்தது.

அவர்களில் பலரும் கருங்கல் பிள்ளையாரிடம் அபாரபக்தியும் கோயில் திருப்பணிகளில் ஈடுபாடும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். குறிப்பாக, தம்பித்துரையும், சங்கரப்பிள்ளையும் பிரதானமானவர்கள். இருவரும் கோயில் ஐயருடன் அடிக்கடி பேசிக்கொள்வர். கோயில் தர்மகர்த்தாவையும் சந்தித்துப்பேசுவர்.

நவக்கிரக மண்டபத்தின் முன்பக்கத்தில் தம்பித்துரையின் பெயர், முகவரி பொறிக்கப்பட்டிருந்ததை ஒருநாள் அவதானித்தேன். உள்வீதியில் வலதுபக்க மூலையில் இருக்கும் சிறு முருகன் கோயில் முகப்பில் 'உபயம் - சங்கரப்பிள்ளை குடும்பம்' எனவும் எழுதப்பட்டிருந்தது. 'மஹாமண்டபம் - உபயம் இலங்கைத் தமிழர்' என எழுதப்பட்ட



கரும்பளிங்குக் கற்பலகை முன்மண்டபத்தில் ஒரு தூணில் பதிக்கப்பட்டிருந்தது. யாவையும் அவதானித்துக்கொண்டு, அவர்கள் பேசுவதை செவிமடுத்து எப்போதாவது என் கருத்தையும் கூறிக்கொண்டிருக்க, நாளடைவில் எல்லோரும் என்னுடன் நெருங்கிப் பழகினர். மனம் திறந்து கதைத்தனர். மழையும் காற்றும் எங்கள் கூட்டத்தைக் கலைக்கவில்லை. மண் ஈரமானால் மண்டபத்தில் ஒரு பக்கம் ஒதுங்கி நின்று பேசுவோம். தூண்களை அலங்கரிக்கும் சிற்பங்களை விமர்சிப்போம்.

அப்படியாக, மழைக்கு ஒதுங்கி நின்ற ஒருநாள். பலத்த காற்றும் வீச கோயில் தரையெங்கும் வெள்ளம். உயர்ந்த கூரை. பக்கச் சுவர்கள் இல்லை. காற்று, மழையை உள்ளே அள்ளி எறிந்தது. கால்கள் குளிர்ந்தன. உடல் நடுங்கிற்று. "மூன்று இலட்சம் செலவழித்து மண்டபம் கட்டியும் பயனில்லை. முன்பே இருந்த கொட்டில் இதைவிடமேல்..." என்றார் ஒருவர்.

"கூரை பதிவாக இருந்தால் மழை உள்ளே வராது" மற்றொருவர் சொன்னார்.

"பக்கங்களுக்கு சுவர் கட்டி மழைநீர் வருவதைத் தடுக்கலாம்" என்றார் இன்னொருவர்.

அவற்றைக் கேட்டுக்கொண்டு சங்கரப்பிள்ளையும், தம்பித்துரையும் அங்கேதான் நின்றனர்.

ஒரு கட்டடக் கலைஞரின் ஆலோசனை பெற்று செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே எழுந்ததுதான். திருப்பணிக்குழுவினரிடையே, இவ்விடயமாக சச்சரவு எழுந்து முகமுறிவு ஏற்பட்டதும் உண்மை.

மற்றொரு நாள்.

என்னருகே வந்தமர்ந்தார் தம்பித்துரை.

"தம்பி எந்த ஊர்...? என்று ஆரம்பித்தார்.

தருணம் பார்த்திருந்தேன் இவருடன் பேச.

"ஊரா...? எல்லாரும் ஒரு மண்தானே... நீங்கதானே நவக்கிரக மண்டபம் கட்டிக்கொடுத்தது"

அவர் முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகை.

"ஓ... நாங்கள்தான்..." என்றார்.

"உங்கள் பெயர், முகவரி மட்டும் எழுதியிருக்கே?..."

ஓ... அது மட்டும் என் பொறுப்பு... மற்றதெல்லாம்... எல்லாரும் சேர்ந்து செய்தது..."

"நீங்கள் வருவதற்கு முன், கொட்டிலில் அல்லது மரநிழலில் இருந்திருப்பாரோ, பிள்ளையார்...?"

"நாங்கள் வந்த நாளில் சின்னக் கோயிலும் கிடுகுக் கொட்டிலும் தான்..." பாதுகாப்பாக ஒரு அரைச்சுவர் கட்டினால் நல்லது" என்று ஐயர் கேட்டதால சுற்றுச்சுவர் கட்டினோம்..."

"பிறகு நீங்கள் மகா மண்டபமும் நவக்கிரக கோயிலும்



கட்டிக் கொடுத்தீங்க... அதையும் ஐயர் கேட்டுத்தான் செய்தீங்களா...?"

"கோயில் திருப்பணி என்று துவங்கினால் தொட்டகுறை விட்ட குறையாக பல வேலைகள் இருக்கும்... கோபுரம் கட்டவும் பெயின்ற் அடிக்கவும் திட்டமிருக்கு... பணம்தான் இல்லை..."

"அய்யா... கேட்கிறேன் என்று கோபப்படாதேயுங்கோ... இதற்கெல்லாம் பணம் உங்களுக்கு எங்கிருந்து வருகிறது...?" கனடாவிலிருந்து மகன் அனுப்புகிறான்..."

"அவர் அங்கே ஏ.சி. அறையில் இருந்து வேலை செய்தா, உங்களுக்குப் பணம் அனு புகிறார்? இல்லை உறக்கம் இழந்து, பனியில் நடுங்கி, ஓய்வு இல்லாமல் உழைத்து அவங்கள் அனுப்புகிற பணம்..." அதை இப்படியா அநியாயமான வழியில செலவழிக்கிறீங்க..."

"மடைக்கதை பேசுறீர்... கோயில் கட்டுகிறது அநியாயமா?" அவர் சத்தமிட்டார்.

"அநியாயமும் அறியாமையும் கூட.." நான் அமைதியாகப் பதிலளித்தேன். தொடர்ந்து, "ஒருவேளை உணவுக்கு வழியின்றி எங்கள் நாட்டில் பல்லாயிரம் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்... ஒரு நூறு பேருக்காவது உணவு தர உங்கள் பணம் பயன்பட்டதென்றால் அது நியாயமென்பேன்... இந்த நாட்டில் இலட்சக்கணக்கான கோயில் இருக்க, மன்னர் காலத்துக் கோயில்கள் எத்தனையோ இடிந்து உருக்குலைந்து கவனிப்பாரின்றி கிடக்க, நீங்கள் புதிதாக கோயில் கட்டுகிறீர்கள்... எங்கள் மண்ணில் கோயில்களெல்லாம் எதிரி போட்ட குண்டுகளால் அழிந்து கிடக்க... அது பற்றிக் கவலைப்படாமல், இங்கே வந்து, இந்த நாட்டவனை விட, நீங்கள் வசதி படைத்தவர்கள் என்று காட்டுகிறீர்கள்... நான் உங்களைவிட வயது குறைந்தவன். உங்கள் மகனைப் போல... உண்மையில் உங்கள் மடைக்கதையைக் கேட்டு எனக்குத்தான் கோபம் வந்திருக்கவேண்டும்..."

"கொஞ்சம் பொறும். நான் மட்டுமல்ல... திருப்பணிக் குழு என்று சிலர் இருக்கினம்.. அவர்கள் பொதுமக்களிடம் பணம் சேர்த்துத்தான் செய்தார்கள். நீர் என்னை மட்டும் குறை சொல்லுறதில் அர்த்தமில்லை..."

"பொதுமக்கள் என்றால், இந்த ஊர்ப் பொதுமக்களும் பங்களிப்புச் செய்தவர்களா? இல்லை... எனக்குத் தெரியும்.. நீங்கள் சொன்னது போல் எல்லாருக்கும் வெளிநாட்டிலிருந்து காசு வருகிறது... எல்லாரும் சேர்ந்து கட்டிக் கொடுத்தீங்கள்.. உங்கள் பிள்ளைகள் அந்தப் பணத்தை உழைக்க என்ன இன்னல்களை அனுபவிக்கிறார்களோ என்று நீங்கள் சிந்திப்பதுண்டா...?"

"அது சரி தம்பி கோயில் திருப்பணி செய்கிறது நல்லதுதானே?..."

"அதுக்கு உங்கள் சொந்த உடல் உழைப்பாயிருந்தால் உங்கள் விருப்பம்போல் செய்யலாம்.. அகதி என்று இங்கே வந்து இருந்துகொண்டு கையேந்துகிறோம், அய்யா போடுகிறோம்..., அடங்கி பயந்து வாழ்கிறோம்... அதைவிட திருப்பணி ஒரு புகழா? நானும் இவ்வளவு நாளும் நீங்கள் பேசுவதை, செய்வதையெல்லாம் அவதானித்து வந்தேன்.. ஐயரும் தர்மகர்த்தாவும் உங்களைப் பயன்படுத்தி தங்கள் வாழ்க்கை வசதிகளை வளப்படுத்திக் கொண்டனர் என்பதைத் புரிந்துகொண்டேன். கொட்டில் பிள்ளையாருக்கு சுற்றிச் சுவர்கட்டி, மண்டபம் கட்டி, கோபுரம் எழுப்பி அழகு செய்து ஐயருக்கு நல்ல வருவாய்க்கு வழி காட்டியுள்ளீர்கள். ஐயர் நீட்டும் தட்டில் பத்துக் காசு போடும் இந்த ஊர் மக்கள் ஒரு ரூபா போடும் உங்களைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்கள். அர்ச்சனைக்கு இரண்டு ரூபா கட்டணம் என்றிருக்க நீங்கள் ஐந்து ரூபாவும் பத்து ரூபாவும் கொடுத்து அர்ச்சனை செய்கின்றீர்கள். நேற்று கிருத்திகை விசேட பூசை என்று கரும்பலகையில் எழுதியிருந்தது. அடிக்கடி இப்படி அந்தப் பூசை இந்தப் பூசை என்று ஐயர் எழுதுகிறார். ஒலிபெருக்கியில் வடமொழி சுலோகம் கேட்கிறது. அது யாருக்குப் புரிகிறது. தமிழில் ஆயிரமாயிரம் பக்திப் பாடல்கள் உள்ளன. அவற்றை ஒலிபரப்புங்கள் என்று ஐயரிடம் சொல்லும் தைரியம் இருக்கா உங்களிடம்? "தமிழில் அர்ச்சனை செய்யப்படும்" என்று எல்லாப் பெரிய கோயில்களிலும் அறிவிப்பு உள்ளது. இங்கேயும் தமிழில் அர்ச்சனை செய்வாரா உங்கள் ஐயர். அந்தத் தூணில் இருக்கிற பளிங்குப் பலகையில் உபயம் மஹாமண்டபம் என்று வடமொழி கலந்து எழுதியிருக்கு. அதை காணிக்கை அல்லது அன்பளிப்பு என்று எழுதியிருந்தாலும் பரவாயில்லை..."

"தம்பி, இதெல்லாம் சிறு விடயம்.. தெய்வ காரியத்தில நாங்கள் குறைகாணக்கூடாது" தம்பித்துரை பணிந்து பேசினார்.

"இல்லை, நாங்கள் ஆண்டவன் பெயரால் ஐயருக்கு அடிபணியும் வழக்கம் பழமையானது. அது எங்களை விட்டுப் போகும்வரை நாங்கள் தலை நிமிர முடியாது. எங்கள் நிலைமையைச் சிந்திக்கவேண்டும். நாங்கள் அகதிகள், இங்கே என்ன தகுதியுடன் வாழ்கிறோம்...? இப்பதான் ஞாபகம் வருகிறது. கும்பாபிசேகம் செய்ய மூன்று குருக்கள் வந்தார்கள். ஒரேநாளில் கும்பாபிசேகம் முடிந்தது. சரியா.. அவர்களுக்கு மூன்று நாள் சாப்பாடு என்று கணக்கு எழுதப்பட்டது. அது ஏன் என்று உங்களுக்குள்ளே சச்சரவு எழுந்தது, என் காதில் விழுந்தது. போகட்டும் விடுங்க, என்றாராம் ஒருவர்..."

"சரி, வரட்டுமா?" என்றவாறு எழுந்தார் தம்பித்துரை.

"சரி, அய்யா போய் வாருங்கோ... இப்படியான அநியாயச் செலவுகளை விடுங்கோ. இதைவிட முக்கியமான செலவுகள் இருக்கு எங்களுக்கு, உங்களுக்கு விளங்கும் என்று நான் நினைக்கிறேன். பணம் மீதி இருந்தால் சேமித்து வையுங்கோ. ஊருக்குத் திரும்பும் நேரம் உதவும். இதைவிட நூறு மடங்கு திருப்பணிகள் இருக்கு அங்கே எனக்குப் புத்திசொல்ல வந்திட்டான். இந்தச் சின்னப் பயல் என்று நினைப்பீங்கள் என் அறிவுக்கு எட்டியதை சொன்னேன். சரி எனக்குப்பட்டதை சொன்னேன்.

தொடர்ந்து கோயில் வாசலில் பொழுது போக்க வந்துகொண்டிருந்தேன்.

ஒருநாள், தூணில் வைக்கப்பட்டிருந்த உபயப் பலகை உடைந்திருந்ததைப் பார்த்தேன். "துப்பரவு செய்யும் தொழிலாளி ஏணியை எடுத்து சாத்தி தூசி தட்டினான். அவன்தான் உடைத்திருப்பான்" என்று பேசிக்கொண்டனர் ஐயரும் தர்மகர்த்தாவும். அதைப் பார்த்துவிட்டு வெளியே வந்த தம்பித்துரை என்னை எரித்துவிடுவது போல் பார்த்துக் கொண்டுபோனார். சிலநாள் செல்ல புதிதாய் ஒரு பலகை வைக்கப்பட்டது. அதில் "மஹாமண்டபம் அன்பளிப்பு இலங்கைத் தமிழர்" என எழுதப்பட்டிருந்தது.

வேரற்கேணியன்

# இலக்கிய முத்து



## பாவி இவள்!

உலகம் போற்றும் உன்னத மறையாம் பொய்யா மொழியை நம் தமிழ்த் தாய்க்கு வள்ளுவன் என்னும் வான்புகழ் புலவன் வழங்கியதற்கு அவர்களும் பங்காளிகள். வள்ளுவனோ தன்பொய்யாமொழியால் தமிழ் தங்கைக்கு முத்தாரம் கட்டினான். ஆனால், இவர்களே வள்ளுவனையே பிரசவித்த உன்னத உயிர்த் தொழிற்சாலைகள். அவர்கள்தான் வள்ளுவனே தன் முப்பாலில் வந்தித்து ஏத்தும் ஆதியும் பகவானும்.

அவர்களது வாழ்க்கை சற்று அதிசயமானது தான் ஆனாலும், அனுசரித்துப் போகவேண்டியதாயிற்று ஆதிக்கு. காரணம் எழுதாச்சட்டங்களாகிய அடக்கு முறைகளுக்குள் அன்று முதல் இன்றுவரை அமிழ்ந்துபோகும் பெண்மையில் அவளும் ஒருத்தி, கட்டியவன் செயலை தட்டிக்கேட்கக் கூடாது. உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்குலத்தில் அவளும் ஒருத்தி.

பகவான் அவன்தான் ஆதியின் கணவன். மங்கலம் என்னும், இல் வாழ்க்கை தன்கலம் என்றும் மழலைகளாலே நிறைவுறுகிறது. குழலினும் இனிய தீஞ்சுவை மழலை மொழிகளால் மகிழாத தந்தையும் உண்டா? ஆம் என்றால் அதற்கு விடை பகவான். பரமன் படைப்பால் பாவி இவள் ஒரு ரகம்.

ஆணினதும் பெண்ணினதும் அன்புக்கு அடையாளமான பிஞ்சு மழலைகளை பிறக்குமிடத்தே விட்டுச் செல்லவேண்டும் என்ற இவனது அரக்கக்குணத்தினால் ஆதியின் வாழ்க்கை எந்நாளும் கண்ணீரில் தள்ளாடியது. காலப்போக்கில் அவளும் பழக்கப்பட்டுவிட்டால், வாழ்க்கையின் வசந்தங்கள் தூரத்துச் சொந்தங்களாகும்போது மனசும் கல்லாய் போய்விடும்.

அன்றும் அப்படித்தான், பனிக்குடம் தாங்கி நிற்கும் புல்நுனிகள் போன்றிருந்த ஆதி அழகான பெண் மகவை ஈன்றாள். பிறந்த கணத்திலே தாய், தாயைப் பிரியப்போகும் யதார்த்தம் புரியாத அந்தச் சேய் பாசத்தோடு தாயைப் பார்க்கின்றது. அந்த மழலை வேறுயாருமல்ல, தமிழ் புலமையால் தரணி புகழ் தமிழ் மூதாட்டி ஔவை அந்தக் குழந்தை, ஆசைப் பெண்மகவின் நேசத்தை விட்டுப் பிரிய முடியாமல் தவிக்கின்றாள் ஆதி. அக்குழந்தையின் பிஞ்சு முகம் என்னம்மா என்னை விட்டுப்போகின்றாய் என கேட்பது போன்று தோன்றுகின்றது. ஆதியின் கண்கள் அருவியாகின்றன. என்னதான் இருந்தாலும் தாய்மையின் வலியறிந்தவளல்லவா, ஏனிந்த வாழ்க்கை என ஏங்கும்போது, ஒரு மழலைக்குரல் அம்மா... வேறுயாரும் அல்ல, இப்போதுதான் இத்தனுக்கு வந்த பிஞ்சு மழலை ஔவையின் குரலே அது. தாயின் ஏக்கத்தை புரிந்து மழலை வாய்திறக்கின்றது.

அம்மா, அழாதே இப்படித்தான் நடக்கவேண்டுமென என்றோ என் தலைவிதியை எழுதிவிட்ட எம் தலைவன் சிவன் இன்னும் இறக்கவில்லை.

இரும் வையத்தை வாட்டும்
வறுமை வந்துற்ற போதும் அண்ணலவன்
ஆதரிப்பான். அன்னாய் நீ கலங்காதே
என்றுரைக்கின்ற அந்தக் குழந்தைக் கவி
கண்ணின் துளிகளை துடைத்தபடி
நடக்கின்றாள் ஆதி தன் கணவன் பின்னே.

கிட்டமுட்ட லென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்ட சிவ னுஞ்செத்து விட்டானோ - முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ

தனிப்பாடற்றிரட்டு

லெஸ்லி

# ஒரு இலக்கியக் கடிதம்

உலகில் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள், தமது உறவுகளுக்கு எழுதும் கடிதங்களில் எல்லாம் இலக்கிய தன்மை வாய்ந்ததாக எழுதி பிரதிபலிக்கக்கூடியதாக இருந்து வருகின்றது. அந்த வகைக்கடிதங்களில் ஒன்றுதான் கவிஞர் அறிவுமதி தனது சகோதரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றினை இங்கே பிரசுரிக்கின்றோம். இப்படியான இலக்கிய தன்மை வாய்ந்த கடிதங்கள், புத்தகங்களின் முன்னுரைகள் எழுதிஇருந்தால், எமக்கு அனுப்புவும்.

அன்புயிர்த்தம்பி செல்வம்!
அண்ணன் பேசுகிறேன்
உனது பிரிவின் விளிம்பில்... மதகுகள் திறந்தும்
அணை மீறட்டும் வெள்ளமாய் உன் அன்பு
எல்லா தூய்மைகளாலும்
எனக்குள் நீ வாழ்ந்த இடத்தின்... வெறுமையை
இனி எவரால் நிரப்ப இயலும்?
எதைத் தொலைத்து விட்டுத் தேடுகையிலும்
இனி நீயே அகப்படுவாய்
கடலின் அதிர்வை
நங்கூரமிட்ட கட்டுமரத்தில்
படிப்பவர்களைப்போல நம் மண்ணின் சூழலை
உன்னில் உணர்ந்தேன் நான்.
மழைக்காலத்தில் நனைந்த அனுபவத்தைப்
பனிக்காலத்தில் தாழ்ந்த மரக்கிளை
உலுக்கி ஈடுசெய்ய இயலுமா?
செல்வம்...
இந்தப் பிரிவை நமது மண்மீதான
சந்திப்பில் மகிழ்ச்சியாக்க... நம் அம்மா பரிமாற
நாம் ஒருசேர உன் கூரையில் பசியாறும்
நாள் அமைந்தால் எவ்வளவு பூரிப்படைவேன்!
அமையும்
நம்புகிறேன்.
அனைவருக்காகவுமான நம்பிக்கையில் கரைந்து
கண்டுகொல்லமுடியாத உழைப்பில் காணாமற் போகிறவர்களே
உன்னத விடியலின் கிரணக் கீற்றுகளில் கண்
டெடுக்கப்படுகிறார்கள். உனது குடும்பமே அத்தகைய
இயல்பினர் என்கையில் உன் செயல்களிலும்
பண்பியல் பத்தியங்கள் கூடிக் கிடந்ததில் வியப்பில்லை.
ஒரு குடும்பப் பிள்ளைகளாய் ஒருசேர
இருந்து வாழக் கிடைத்த
இந்த நாள்களெல்லாம் இனி
நினைவுகளாய் மட்டுமே உன்னை அழைத்துவந்து
என்னோடு பேசிக்கொண்டிருக்கும்
என்று நினைக்கையில் வலிக்கிறது
செல்வம்! நம் மண்ணின்
எல்லா முகங்களிலும் நான் அந்தத் தூய
புன்னகையையே பார்க்கிறேன்
அந்தப் புன்னகையால் கண்டெடுக்கப்பட்ட
உறவுதான் நம் உறவும்
இந்த உறவு இனி
எம் மிச்ச நாள்களிலும்
ஒரே கடமையில் முடிச்சிட்டுத்தான்
இயங்கும் என்கிற
நம்பிக்கையில் நாம்
நம்மைக் கிழித்துக் கொள்வோம்
ஆனாலும்...
அடிக்கடி வந்து உன்
முகம்.. உன் புன்னகை... உன்
தூய்மை
என்னை இயக்கிக் கொண்டே
இருக்கும்
என்னைத் தூய்மை செய்துகொண்டே
இருக்கும்
எனக்குள் நம்பிக்கைகள் விசிறிக்கொண்டே
இருக்கும்
என் எல்லா வாழ்த்துக்களோடும் அண்ணன்.

அறிவுமதி

# வாழ்நாளில்...!



இன்றைக்கும் நாளைக்குமல்ல
என்றைக்கும் பார்க்க முடியாத
நினைவுகள்
இரவில் வரும் கனவுகள்!

மறக்க முடியாமல்
இதயத்தில் ஆழப்பதியும்
உணர்வுகள், தினம் தினம் தரும்
புதினங்கள்!

பார்க்க முடியாத காட்சிகளை
பார்க்கத் துடிக்கும் கண்கள்
பார்த்து விட்டு குறைகூறும் குணங்கள்!

நீ, நான் என்ற, ஆண், பெண்
பேதமின்றி, அடிபட்டுச் சாகும் பிணங்கள்
எத்தனை வகை இனங்கள்!

எல்லோரின் மௌனங்களும் சம்மதமல்ல
கால்போன போக்கில் போகும்
பயணங்கள்!

ஏழைகளின் கன்னங்கள்
தினம், தினம் கண்ணீரில் நனையும்
கிண்ணங்கள்!

இளமை, சில கணங்களில் மாறுபடும்
எண்ணங்கள்!

ஆயுளில் ஏன் இந்த வினைகள்
பிறவிகளில் வரும் துணைகள்
துக்கத்தைக் கொடுக்கும் பிணிகள்!

பல மரங்களில் பல கனிகள்
பல விதங்களில் பல மனங்கள்!

ஆசையால் வளரும் சனங்கள்
ஆட்டிப்படைக்குது பணங்கள்!

உஷா

# நேற்றைய ஆடும் இன்றைய புத்தரும்

சூரியனின் வியர்வையாய்ச்
சொரிகின்ற வெயிலொழுகி
ஊர் கொதிக்கும் மதியம்
ஒற்றையடிப் பாதையிலே
"நாவற்குழி நடைபோல்"
நானூறு செம்மறிகள்

தாவி இடறி தடுமாறி ஜீவகள் அற்ற
நீரோட்டம் போல நீள்கிறது பயணம்


பீந்துசார மன்னன் பேர்சொல்லும் யாகத்தில்
பந்திவைக்கப்படத்தானே இப்பட்டி விரைகிறது

அந்தோ!
ஓர் குருத்து ஆடு
இடைநடுவில் நொண்டி நுடங்கிக் குறண்டி
இருள் விழியைச் சுண்ட
நாக்குழறிச் சுருண்டு வீழுகிறது!

எங்கிருந்தோ குதித்தார் ஒருவர்
உடம்பெங்கும்
"மஞ்சளினைச்" சுற்றி மறைத்திருந்தார்
கண்களிலோ
செங்குருதித் திட்டுக்கள்!
செய்துவிட்ட புன்னகையில்

விநோத உடைப் போட்டிக்காய்
வெளிக்கிட்ட புத்தரைப்போல்
அநாயாச நடைநடந்து ஆட்டினருகே
வந்தார்.

நொந்து சுருண்ட ஆட்டின்
நோய் குறித்து
அந்தோ! கண்ணீர் வடித்தார்
அவ்வாட்டைத்
தன்தோளில் வைத்துத்
தடவிக் கொடுத்தபடி




சின்னக் குழந்தாய்
சிறிது பொறுத்துக்கொள்
மன்னவர்கள் யாகம் மாட்சி பெறவேண்டும்
எங்கள் தேசியம்
இறைமை இவை பற்றி அந்த
"வம்சக்கதைகள்" சொன்ன
வல்லாண்மை வெற்றிபெற

உன்னைப்போல் "சிறுபான்மை"
உயிரைத் தரல்வேண்டும்
நாட்டைப் பிரிக்கும் சூனியத்தை
முறியடிக்க
ஆட்டைக் கொல்வதொன்றும்
அகிம்சை விரோதமல்ல
யாகசாலை வரையுன்னை
யான்கொண்டு செல்கின்றேன்
நோகாமல் என்தோளில் நுடங்கிக்
கிடவென்றார்.

ச.முகுந்தன்

# நூல் அகம்






"தந்தை செல்வா காவியம்" என்றொரு நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலின் ஆசிரியர் தில்லைச்செல்வன் என்று அழைக்கப்படும் தி.சிவகாமி என்பவராவர்.

பெரியவர் என்றும், ஈழத்துக் காந்தி என்றும் போற்றப்பட்டவர் வி.செல்வநாயகம் அவர்கள் இன்றைய அரசியல் வாதிகளுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முதலில் அகிம்சைப் போரை நடத்தியவர். அகிம்சைப் போரின் மூலமாக தமிழர் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது என்பதை உணர்ந்து ஆயுதப் போராட்டத்திற்கான கால்கோலை இட்டுக்கொடுத்தவரும் செல்வநாயகம் அவர்களே.

இன்றைய ஆயுதப்போராட்டத்தின் மூலமான இறுதிக் கோரிக்கையான தமிழீழம் என்ற கோரிக்கையை இலங்கை அரசுக்கு எதிராக முன்வைத்து, பல போராட்டங்களை முன் நடத்தியவர் தந்தை செல்வநாயகம் அவர்கள்.

இந்த வகையில் சிறப்புக்கும் தமிழீழத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒருவராகவும் விழங்கிய தந்தை செல்வாவின் 27 ஆவது நினைவுதினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. அவரை நினைவு கூருமுகமாக இந்நூல் அவரின் நினைவு தினத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கிய மரபில் கவிதை என்பது இரண்டு வகையில் நோக்கப்படுகின்றது. மரபுக்கவிதை, புதுக்கவிதை என்பனவே அவையாகும். இந்த இரண்டு கவிதைகளும் காலத்திற்கு ஏற்றவகையில் தனது வடிவங்களை மாற்றிக்கொண்டு வந்துள்ளன.

பொதுவாக பாரதியார் காலப்பகுதியில் இருந்து தமிழக இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதை மரபே இயங்கிவந்துள்ளது. அத்தகைய மரபு இருந்து வந்தபோதும் மரபுக்கவிதைகளில் கவிதைகளை இயற்றுவோர் இடையிடையே மின்னிக் கொண்டேயிருந்துள்ளனர்.

இந்த வகையில் தந்தை செல்வா காவியம், மரபுக்கவிதை வடிவத்தில் அமைந்துள்ள காவியம் என்ற சொல்லின் பொருள் கதையோடு கூடிய நீண்ட கவிதை என்ற பொருளைத் தருகின்றது.

தந்தை செல்வாவின் வாழ்க்கையை, அவர் வாழ்ந்த அரசியல் வாழ்வை, மக்களின் உரிமைகளை வென்றெடுக்க தந்தை செல்வா செய்த அளப்பரிய அர்ப்பணிப்புக்களை ஆசிரியர் கவிதை வடிவிலே தந்துள்ளார்.

கதையின் நாயகன் தந்தை செல்வாவாக அமைந்தாலும், ஈழம் என்பதே கதையின் நாயகனாக; காவியத்தின் நாயகனாக அமைந்துள்ளது.

ஈழம் என்ற சொல் வழங்கப்பட்ட ஈழத்துப் பூதந்தேவனார் காலத்தில் இருந்து தந்தை செல்வாவின் காலம்வரையும் ஈழமும், ஈழத்தில் வாழ்ந்த மக்களும் அடைந்த துன்பங்களைக் கூறுகின்ற காவியமாகவும் இது விளங்குகின்றது.

தந்தை செல்வா தமிழர்களுக்கு இனித் தெய்வமே துணை என்று கூறினார். அவரின் கூற்றுப்படி -

"பொங்குமலைக் கடலோரம் சுடர் ஒன்றைப் பலநூறு கதிர்
களோடு இங்குயிர்த்தார்.
பிரமையோடு எழுந்து வரக் கண்டுலகம் வியந்ததம்மா!'

என்ற கவிவரியோடு தந்தை செல்வா காவியம் நிறைவு பெறுகின்றது.

நல்லதொரு அறிமுகவுரையை பேராசிரியர் சிற்றம்பலம் எழுதியுள்ளார். கொழும்பு விகடன் அச்சகம் அழகிய முறையில் இந்நூலை அச்சில் கொண்டு வந்திருக்கின்றது.

- பூ.நகுலன்

கனகரவி



# விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கு 30ஆயிரம் பேரைத்திரட்ட ஜே.வி.பி. திட்டம்



**மக்கள் விடுதலை முன்னணியை பொறுத்தவரையில் அதன் கொள் கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழ் மக் களின் ஏகப்பிரதிநிதி களாகவோ அல்லது அவர்களின் போராட்டத்துக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலமே இலங்கையில் பிரி வினையை தடுக்க முடியும் என்ற அவர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. எனவே, அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் மூலம் ஒரு யுத்தத்துக்கான கால அவகாசத்தை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவர்களின் யோசனையின் அடிபபடை யிலேயே ஜனாதிபதி சமாதான பேச்சுக்களை அவசர அவசரமாக ஆரம்பித்துள் ளார்.ஜனாதிபதி இந்த சமாதான பேச்சுக்களை ஒரு வருட காலத்திற்கு இழுத்துச் செல்வாராக இருந்தால் இதற்குள் தமிழீழ விடுத்லைப்புலிகளுக்கு எதிராக போரிட ஆயுதப்படை ஒன்றை உருவாக்கவே மக்கள் விடுதலை முன்னணி திட்டமிட்டுள்ளது.**

இலங்கையில் எதிர்பார்ப்புக ளும், சந்தேகங்களும், வதந்திக ளும் தற்சமயம் சர்வசாதாரணமானவை யாகிவிட்டன. கடந்தவாரம் வன்னியில் இடம பெற்றதாக கூறப்படும் பல்வேறு வதந்திகள் தென்னிலங்கையில் உலாவின.

இது மிகவும் பாரதூரமானவை போன்ற நிலையில் கூடபேசப்பட்டன. எனினும் அவையாவும் பொய்யா னவை என்பதை தெரிந்து கொள்ள கால அவகாசங்கள் தேவைப்பட்டன. தென்னிலங்கையைப் பொறுத்தவரை யில் இன்று நடப்பது எல்லாம் கனவா? அல்லது நனவா? என ஊகிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இலங்கையின் சட்டவாக்கங்களின காவலன் நாடாளுமன்றமே, அது அர சியலமைப்பிலும் சொல்லப்பட்டுள் ளது என்றெல்லாம் கதைக்கப்பட்ட நேரத்தில், அதனைவிட அதிகாரம் கொண்டது ஜனாதிபதி முறை, என் றும் உணரப்பட்டது. அவை இரண் டுக்குமிடையிலான போட்டியில் இறுதி யில் ஜனாதிபதியே வெற்றி காணக் கூடியதாக இருந்தது.

இந்த வெற்றியை நாடாளுமன் றத்தில் பெரும்பான்மையைக் கொண் டிருந்த ஐக்கிய தேசிய கட்சியாலும் ஏற்றுக் கொண்டு நடக்கவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுவிட்டது.

1977 ஆம் ஆண்டில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நடை முறைப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் சிக்க லான அரசியலமைப்பு இன்று அவ ருடைய கட்சிக்கே ஆபத்தைக் கொண்டு வந்துவிட்டது. ஆனால், அது நாட் டுக்கு நன்மை செய்வதற்காக பயன் படப்போகிறதா? அல்லது மீண்டும் ஒரு யுத்த சூழ்நிலைக்கு வழிவகுக் கப் போகிறதா? என் றெல்லாம் மக் கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட் டுள்ளது.

இலங்கையின் சிங்கள வரலாறு தொடந்தும் தமிழர்களை அடக்கி ஆளும் தன்மையை கொண்டிருந்த மையால் மீண்டும் அவ்வாறான நிலையை தமிழ்மக்கள் மீட்டிப் பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை யில் தமிழ்மக்களில் நூற்றுக்கு 80 வீதமானோர் யுத்தம் மீண்டும் ஏற் படாது என்றே நம்பிக்கை கொண டுள்ளனர். ஆனால், அந்த நம்பிக்கை யிலும் அவ்வப்போது தளம்பல்கள் ஏற்படுகின்றன.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் முன்கொண்டு செலலப்பட்ட சமா தான நகர்வுகள் சர்வதேச வலைப் பின்னலாக மேற்கொள்ளப்பட்டமை யால் தமிழ்மக்கள் ஓரளவு நம்பிக் கையை வெளிப்படுத்தி வந்தனர். ஆனால், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க இந்தியாவை மாத் திரம் முன்னிலைப்படுத்தி சமாதான நகர்வை மேற்கொள்ள முனைந்த போது, மக்கள் மத்தியில் இந்திய அமைதிப்படையின் ஞாபகம் அச் சத்தை ஏற்படுத்தியது. ஆனால, இந்த நிலைமையில் தற்சமயம் மாற்றம் ஒன்று தென்பட்டிருப்பது சற்று ஆறு தலை அளித்துள்ளது.

ஜனாதிபதி ஐக்கிய தேசிய கட்சி மேற்கொண்ட அதே பாணியில சமாதான நகர்வை முன்நடத்தி செல்லத் தீர்மானித்தமையானது, முன்னர் அவர் மீது மக்கள் - குறிப் பாக தமிழ் மக்கள் காட்டிய வெறுப் பில் தளர்வை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியைப் பொறுத்தமட்டில் இது ஒரு ஞானப்பார்வை என்றே சொல்ல வேண்டும். சந்திரிகாவின் ஆட்சி கொடுங்கோல் ஆட்சி என்றே மக்கள் மத்தியில் நிலைப்பாடு காணப்பட்டது.

எனவே, அவர் கூறுகின்ற ஒவ் வொரு சொல்லும் மக்கள் மத்தியில் பல அர்த்தங்களின் அடிப்படையில் நோக்கப்பட்டன. அவர் சரியான கருத்தைச் சொன்னால் கூட அதனை உதாசீனப்படுத்தும் அளவிற்கு மக் கள் அவர் மீது நம்பிக்கை இழந் திருந்தனர்.

தற்போதைய சூழ்நிலையில் அதில் உடனடி மாற்றம் ஒன்று ஏற்படாவிட்டாலும், சந்தேகத்துடன் கூடிய நம்பிக்கையை மக்கள் வெளிப் படுத்தி வருகின்றனர். இந்த சந் தேகம் ஏற்படுவதற்கு ஜனாதிபதி யுடன் இணைந்து ஆட்சியை நிறுவி யுள்ள மக்கள் விடுதலை முன்ன ணியே காரணம் என்பது அனை வரும் ஏற்றுக் கொள்கிற விடயம். எனவேதான், இன்று அந்த மக்கள் விடுதலை முன்னணியும் தமது போக்கில் மாற்றங்களை ஏற்படுத்திக கொள்ள முனைந்திருக்கிறது.

அதில் தற்சமயம் வரை அது வெற்றியும் கண்டிருக்கிறது. இதில் ஒன்றுதான் இனவாதக் கொள் கையை கொண்டிருக்கும். தமிழர் களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் அர சாங்கத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு செல்ல மாட்டார்கள் என பெரும்பாலானோர் எண்ணியிருந்த வேளையில்,அதில் திடீர் மாற்றம் ஏற்பட்டமையாகும். தேர்தல் பிரசார மேடைகளில் பெரி தாக தமிழீழ விடுதலைப் புலி களுக்கு எதிரான கருத்துக்களை பேசிவந்த மக்கள் விடுதலை முன் னணி தேர்தலின் பின்னர் தமது நிலைப்பாட்டில் சடுதியான மாற் றத்தை ஏற்படுத்திக் கொண்டது. இதற்கு மத்தியில் மக்கள் விடு தலை முன்னணியைப் பற்றி இரக சிய மட்டங்களில் பேசிக் கொள்ளப் பட்ட சில விடயங்களையும் இந்த நேரத்தில் கூறிவிடுவது பொருத்த மாக இருக்கும்.

மக்கள் விடுதலை முன்னணியை பொறுத்தவரையில் அதன் கொள் கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி களாகவோ அல்லது அவர்களின் போராட்டத்துக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலமே இலங்கையில் பிரிவினையை தடுக்க முடியும் என்ற அவர்களின் நிலைப் பாட்டில் மாற்றம் இல்லை. எனவே, அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் மூலம் ஒரு யுத்தத்துக்கான கால அவகாசத்தை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவர்களின் யோசனையின் அடிப படையிலேயே ஜனாதிபதி சமாதான பேச்சுக்களை அவசர அவசரமாக ஆரம்பித்துள்ளார்.ஜனாதிபதி இந்த சமாதான பேச்சுக்களை ஒரு வருட காலத்திற்கு இழுத்துச் செல்வாராக இருந்தால் இதற்குள் தமிழீழ விடு தலைப்புலிகளுக்கு எதிராக போரிட ஆயுதப்படை ஒன்றை உருவாக் கவே மக்கள் விடுதலை முன்னணி திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் ஆயுதப்படை களில் மக்கள் விடுதலை முன்ன ணிக்கு நம்பிக்கையில்லாமை கார ணமாகவே இவ்வாறான திட்டம் ஒன்றை மக்கள் விடுதலை முன் னணி ஜனாதிபதியின் உதவியுடன் தீட்டியுள்ளது. தமது சுமார் 30 ஆயிரம் உறுப்பினர்களை திரட்டி அவர்களுக்கு முழுமை இராணுவப் பயிற்சி கொடுப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தம் ஒன் றில் தோற்கடித்து தமது மாக்ஸிஸ சித்தாந்தத்தை நாட்டில் நிலைநாட் டிக்கொள்வதே மக்கள் விடுதலை முன்னணியின் இறுதி இலக்காக இருப்பதாக மேலே குறிப்பிட்ட இரக சிய தகவலின் மூலம் தெரியவந் துள்ளது.

இதனை மையமாகக் கொண்டே ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங் கம் ஆட்சிக்கு வந்த உடனேயே இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பை மேற்கொண்டது என்றும், இதில் பெருமளவான மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களை இணைத துக் கொள்கிறார்கள் என்றும் அந்த இரகசிய தகவலில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது உண்மையான தகவலா? அல்லது பொய்யான தகவலா? என் பது தொடர்பாக இறுதி தீர்மானத் துக்கு வர முடியாத போதும், தமிழர் போராட்டத்திற்கு இவ்வாறான சவால களும் ஏற்பட வாய்ப்புண்டு என் பதை நிராகரிக்க முடியாது.

ஈழ யுத்த வரலாற்றிலும் இது போன்ற நாச வேலைகள் இடம் பெற்றே வந்துள்ளன என்பதை மறக்க முடியாதல்லவா? குறிப்பிட்ட இரகசிய தகவல் தொடர்பில் மக் கள் விடுதலை முன்னணி மறுப்பை வெளியிட்டுள்ளது.

தமக்கு ஆயுதப் போராட்டத்தை காட்டிலும் ஜனநாயகப் போராட்டமே தற்போதைய வளர்ச்சிக்கு உதவி யுள்ளமையால் தற்சமயம் கிடைத் துள்ள அரசாட்சி வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு, அடுத்த பொது தேர்தலில் தனித்து அரசாங்கம் அமைப்பதே தமது நோக்கம் என அந்தக் கட்சி கூறுகிறது. தென்னி லங்கையில் தற்சமயம் இனப்பிரச் சினை தீர்வு விடயத்தில் ஜாதிக ஹெல உறுமய பிரதான எதிர்க் கட்சி வரிசையில் முக்கியத்துவம் பெற்று விட்டது.பௌத்த மதகுருமார் என்பதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த ஜாதிக ஹெல உறுமயவிற்கு அடிபணிந்து செல்வதால் இந்த நிலை ஏற்பட் டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி கோரியது போலவே நோர்வே நாட்டை சமா தான முயற்சிகளுக்கு ஏற்பாட்டாள ராக மீண்டும் ஒரு முறை ஜனாதிபதி அழைத்தமையால் அந்த கட்சி அடங்கிப்போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், முன்னர் தாம் விட்ட இடத்தில் இருந்து பேச்சுவார்த்தை களை ஆரம்பிப்பதற்கும் ஜனாதிபதி இணங்கியிருப்பதால் தற்போதைக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவுக்கு தமது அரசியல் எதிரி யான ஜனாதிபதியுடன் இணங்கிப் போக வேண்டிய நிலை எழுந்துள் ளது. எனவே இங்கு ஜாதிக ஹெல உறுமய இந்த விடயத்தில் பிரதான எதிர்கட்சியாக மாறியுள்ளது.

இது அந்தக் கட்சியின் வளர்ச் சியை மேலும் உயர்த்தலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலை யில் நோர்வே தரப்பின் ஏற்பாட்டு நிலை தொடர்பாக மக்கள் விடு தலை முன்னணி ஜனாதிபதியிடம் இருந்து விளக்கத்தை கோரியுள் ளது. இது ஜனாதிபதி தமது பிடி யில் இருந்து மீறிவிடக்கூடாது என் பதற்காக அந்த கட்சி மேற்கொள் ளும் உத்தியாகும்.

ஏனெனில், முன்னர் நோர்வே தரப்பினர் நாட்டில் இருந்து வெளியேற வேண்டும் என கோசித்த மக்கள் விடுதலை முன்னணியினர் இன்று அதனை கைவிட்டு, நோர்வே தரப் பினர் தாம் அங்கம் வகிக்கும் அர சாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுமதித்துள்ளனர்.

இது அவர்களின் அரசியல் சூழ்ச்சியையே குறித்து நிற்கிறது. இந்த நிலையில் தமது வாக்காளர் களை திருப்திப்படுத்தும் வகையி லேயே ஜனாதிபதியிடம் அவர்கள் விளக்கம் கோரும் செயற்பாடு அமைந்துள்ளது.

தற்போதைய நிலையில் நோர்வே தரப்பை முற்றாக நிராகரித்து நிலை மையை சிக்கலாக்கும் எண்ணம் மக்கள் விடுதலை முன்னணியிடம் இல்லை. தமது சிறுபான்மை அரசாங் கத்திற்கு ஐக்கிய தேசிய கட்சி யிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் பாரிய ஆட்சிக் கவிழ்ப்பு அச்சத்தை தமது இனப்பிரச்சனை தீர்வு விட யத்தில் தலையிடாத கொள்கை யின் மூலம் தவிர்க்க முடியும் என அந்தக் கட்சி நம்புகிறது.

இதேவேளை, ஜனாதிபதி தாம் விரும்பிய ஆட்சி வந்ததன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி யின் போது தாம் கூறியவை, செய் தவை எல்லாவற்றையும் மறந்து உடனடியாக அந்தக் கட்சி முன் கொண்டு சென்ற சமாதான முன் னெடுப்புகளை அப்படியே நகர்த்தி செல்வதற்கு இணங்கியமை, விய ப்பையும், அதேநேரம் சந்தேகத்தை யும் ஏற்படுத்தியுள்ளது.


மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இவ்வளவு சீக்கிரம் ஜனா திபதியின் முயற்சிக்கு ஆதரவளிப் பர் என எவரும் நம்பியிருக்க வில்லை. எனவே ஜனாதிபதி நோர்வே தரப்புக்கு என்ன உத்தரவாதத்தை அளித்தார். நோர்வே-ஜனாதிபதியை, தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடி யாக நம்பும் அளவிற்கு என்ன உத்தரவாதத்தை அளித்தார்கள் என்பவையே இன்று தொக்கி நிற் கும் கேள்விகளாக தென்னிலங் கையில் காணப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்த வரையில் தற்போதைக்கு வடக்கு - கிழக்கு இடைக்கால நிர் வாகக் கொள்கையில் உறுதியாக இருப்பதால் அது தொடர்பில் நிச் சயமாக ஜனாதிபதி உறுதி ஒன்றை அளித்திருக்கிறார் என்றே நம்பப் படுகிறது. எனினும், மக்கள் விடு தலை முன்னணியின் ஒப்புதலின் அடிப்படையில்தான் வழங்கப்பட் டதா?அல்லது ஜனாதிபதியின் தனிப் பட்ட முடிவா? என்பது இன்னும் தெளிவாகவில்லை.

இதற்கு மத்தியில், மற்றும் ஒரு தகவலையும் கூறவேண்டும். இனப் பிரச்சினைக்கு தீர்வு தமது தலை மையின் கீழேயே ஏற்படவேண்டும் என உறுதியாக இருக்கும் ஜனா திபதி, அதற்காக மக்கள் விடுதலை முன்னணி தமது நகர்வை எதிர்க்கு மானால் அதனை தவிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கூட் டாட்சியை மேற்கொள்ளத்தயாராக இருப்பதாகவும், அதற்காக விரை வில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கும் உத்தேசித்துள்ளார்.

அரசியலுக்கு அப்பால் இலங் கையில் இடம்பெற்று வரும் இன வன்முறைகள், மற்றும் தமிழர் களுக்கு எதிரான தேடுதல்கள் அச் சத்தை ஏற்படுத்தியுள்ளன. மலைய கத்தின் கந்தப்பெலவில் இடம் பெற்ற பொலிஸாரின் தமிழர்கள் மீதான துப்பாக்கிச் சூடு, களுத் துறை பிங்கிரிய தோட்டத்தில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டமை, கொழும்பில் இடம்பெறும் தேடுதல் கள் போன்ற தொடரும் நடவடிக்கை கள் ஜனாதிபதியினது அரசாங்கத் தின் மீது தமிழர்கள் மத்தியில் சந்தேகத்தை வளர்த்துக் கொண்டே தான் இருக்கும்.

## பார்வைகள் பதிவுகள் பகிர்வுகள்



இப்பொழுது ஒரு ஒளிப்படக் கலைஞரை அறிமுகம் செய்யவுள்ளேன். இவர் ஒரு தமிழர் அல்லராயினும் கூட தமிழர் தாயக வனப்புகளை சிறப்பாக புதிய கோணத்தில் ஒளிப்படங்களாக பதிவு செய்தவர்களில் ஒருவரான டொமினிக் சன்சோனி பற்றியே இந்த அறிமுகம் அமைகின்றது.

1970 களில் தமிழ் மக்கள் மீதான சிங்களக்காடையர்கள், பேரினவாதிகளின் வன்முறை கலவரத்தை விசாரிக்க சிறிலங்கா அரசு ஒரு ஆணைக குழுவை அமைத்தது. அதன்பெயர் சன்சோனி ஆணைக்குழு, அந்த சன்சோனி குடும்பத்தவர்தான் ஒளிக கலைஞர் டொமினிக் சன்சோனி இலங்கை மற்றும் தென்னாசிய நாடுகள், இந்தோனேசியா ஆகியவற்றை ஒளிப்படங்களாக பதிவு செய்துள்ளார் அவர்.

அவரின் ஒளிப்படங்கள் பெரும்பாலானவை நிஜக்காட்சிகள்தான். இலங்கையின் நிஜக்காட்சிகளில் இவர் தமிழ்மக்களின் தாயகப் பகுதிகளின் நிஜக்காட்சிகளையும் பதிவு செய்துள்ளார். தாயகத்திலும் மிக அதிகமாக திருக்கோணமலைமுதல் அம்பாறை வரையான பகுதிகளின் ஒளிப்பதிவுகளே மிக அதிகமாகும்.

வன்னி, யாழ்ப்பாணப் பதிவுகள் இருப்பினும்கூட ஒப்பீட்டளவில் அவை குறைவானவை. அவரின் ஒளிப்படங்கள் மிக மிக அமைதியானவை. அமைதி யானவை எனப் படுகின்றபோது அது எப்படி எனக் கேட்கலாம்.

சூழலின் பரபரப்புத்தன்மை இவரது ஒளிப்படங்களில் இல்லை. அநேக மாக சூரியன் எழுமுன்னரான ஒரு கலங்கள் (HAZE) ஒளியே டொமினிக் சன்சோனியின் ஒளிப்படங்களில் பிரதி பலிக்கின்றன. இன்னமும் எளிமையா கக் கூறுவதனால் பனிப்புகார்த்தன்மையுடன் இவரின் படங்கள் காணப்படும்.

இவரது கோணம் புதியது என்பது இதுவே. இதிலும் ஒரு அமைதி யைக் காணமுடியும். இந்த அமைதியே இவரது படங்களின் சிறப்பாகும். www.dominicsansoni. com என்ற இணையத்தளம் மூலம் இவரது ஒளிப்படங்களை நாம் காணலாம். சிங்களப்பகுதிகளின் படங்களே அதிகமாக உள்ளபோதிலும் தமிழர் தாயகப்படங்களும் உண்டு. இந்த ஒளிப்படங்களின் பெறுமதி மிக அதிகமானதாகும். அதுவே உண்மையான ஆவணமாகும். இந்த வகையில் சன்சோனியின் ஒளிப்படங்கள் புதிய கோணம் புதிய பார்வை, புதிய பதிவு.

- திரு. த. திரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று
திருக்குறள்

# நமது நோக்கு

## அமெரிக்காவின் சுயமுகத்தை அம்பலப்படுத்தும் ஈராக்கிய கைதிகள் மீதான கொடுமைகள்...

உலகப் பயங்கரவாதத்திற்கு எதிராகப் பிரகடனம் செய்யப்படாத ஒரு யுத்தத்தை, பாரிய அளவில் பிரசாரம் செய்துகொண்டு ஆரம்பித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் படையினரின் சர்வதேச ஜனநாயகப் பாரம்பரியத்திற்கும், மனித உரிமைகளுக்கும், மானிடகலாசாரத்திற்கும் எதிரான மிருகத்தனமான ஈராக்கிய கைதிகளின் மீதான நடவடிக்கைகள் சர்வதேச சமூகமே வெட்கித் தலைகுனியக்கூடிய வகையில், அமெரிக்க ஆட்சியாளரை நவ பாஸிச சக்திகளாக இனங்காட்டியுள்ளது என்றால், அது மிகையில்லை.

இரண்டாம் உலகப்போரின்போது, சர்வதிகாரி ஹிட்லரின் ஆணைக்கிணங்க - அபிலாஷைகளுக்கிணங்க - அவரது 'நாஜி' ப்படைகள் யூத இனத்தவர்களுக்கு எதிராக மேற்கொண்ட கொடூரமான கொலைகள், சித்திரவதைகள் ஆகியவற்றின் வரலாற்றுப் பதிவுகளின் அவல அதிர்வும், இரத்தவாடையும் கொண்ட வரிகளைத் தோற்கடிக்கும் வகையில், புஷ் என்கின்ற ஜனநாயக வாதியின் சர்வாதிகாரத்தனம் வாய்ந்த செயற்பாடுகள் அமைந்துவருவதன் வெளிப்பாடாகவே ஈராக்கிய கைதிகள் மீதான இரத்தக் காட்டேறி (DRACULA) தன்மை கொண்ட சித்திரவதைகளும், கொலைகளும் உலகத்தால் உணரப்பட்டுள்ளது.

ஆயிரம் காரணங்களை அமெரிக்காவும், அதன் ஜனாதிபதியான புஷ்ஷும், அவரது சகாக்களான ரம்ஸ்பீல்ட் போன்றவர்களும் கூறினாலும், ஈராக் மீதான அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற அதன் பிற்பாட்டு நாடுகளும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்பதை இன்று உலகின் பல நாடுகள் பகிரங்கமாகக் கூறியும் சிலநாடுகள் மௌனமாக அங்கீகரித்தும் உள்ளன.

சதாமின் சர்வாதிகாரத்திலிருந்து ஈராக்கை மீட்கவென அந்த நாட்டினுள் படை நடத்திச் சென்ற அமெரிக்கா அந்த மண்ணில் என்ன செய்தது, என்னசெய்கிறது என்பதை தனது சர்வதேச மேலாதிக்க வல்லமையால் ஊடகங்கள் மீதான ஆதிக்கத்தால் மறைக்க முயன்று வந்தபோதிலும் ஈராக்கினுள் அமெரிக்கா செய்துள்ள அராஜகம் இன்று ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவர்களையும் மற்றொரு ஹட்லராக அடையாளப்படுத்தியுள்ளதுடன், வியடநாம் யுத்த காலத்தை மீண்டும் நினைவுக்கு கொண்டு வந்துள்ளது.

வீடு கொழுத்துற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் அமைச்சராகச் செயற்பட ஜோர்ஜ் புஷ்ஷுக்கு ஒரு ரம்ஸ்பீல்ட் கிடைத்ததுதான் அனைத்து அசிங்கங்களுக்கெல்லாம் காரணம் எனலாம்.

ஈராக்கிய கைதிகள் மீதான சித்திரவதைகள் மற்றும் மனித உரிமை மீறல் கொடுமைகளை ஒரு சில படையினரே மேற்கொண்டனர் என்று சமாளிப்பு பாடல் பாடமுனையும் ரம்ஸ்பீல்டின் செயற்பாடுகள் பொறுப்புள்ள ஒரு வல்லரசு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் செய்யக்கூடியவைகள் அல்ல.

மற்றவர்களை நிர்வாணப்படுத்தி, சித்திரைவதைகளுக்குள்ளாக்கி அதனை ரசிக்கும் அமெரிக்க படையினருக்கு இவர்தான் நெறியாளர் என்றால், அத்தகைய வக்கிரப்புத்தி கொண்ட மனநோயாளர்களாக நடந்துகொண்ட படையினரின் குணாம்சங்களில் இவருக்கும் கணிசமான அளவு இருந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

ஜனநாயகத்தில் எல்லாமே சரியாக நடக்கும் என்று சொல்லமுடியாது என்று கூறும் ரம்ஸ்பீல்ட், ஈராக்கில் சரியற்ற - ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அமெரிக்க நிர்வாகம் மேற்கொண்டது என்பதை ஒப்புக்கொள்கிறாரா?

அப்படியானால், முறைகேடான நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்று ஜனநாயகப் பண்புகளுக்கேற்ப பதவியை ராஜினாமா செயவதே கண்ணியமான விடயமாகும். ஆனால், அவர் அதைச் செய்யும் நாகரிகம் உள்ளவராக இதுவரை நடந்து கொள்ளவில்லை.

ஈராக்கில் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் அனைத்திற்கும் தானே பொறுப்பென்று கூறி வெறும் வார்த்தையளவிலான மன்னிப்பை மட்டும் கேட்டுத் தப்பித்து கொள்ள முனையும் ரம்ஸ்பீல்டின் செயலை அமெரிக்க மக்களே நிராகரித்து ஒதுக்கி அவரை எதிர்க்கும் நிலை உருவாகியுள்ளமையானது புஷ் நிர்வாகத்திற்குக கிடைத்துள்ள அவமானகரமான பின்னடைவேயாகும்.

அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைகளுக்காக கிளர்ந்தெழும்போது, அதனை பயங்கரவாதம் என அடையாளப்படுத்தி ஆதிக்க வெறியர்களின் செயல்களை நியாயபபடுத்தி, அவர்களுக்கு உதவ முன்வரும் அமெரிக்க ஜனநாயகம் நவீன சர்வாதிகாரத்தின் ராட்சச வடிவமேயாகும்.

இப்போதெல்லாம் வெள்ளை மாளிகையை உற்றுப்பார்ப்பவர்களுக்கு அது உலகம் பூராகவும் - அமெரிக்க சர்வாதிகார ஜனநாயக கட்டுப்பாடுகளுக்கு அடிபணியாத மனித உரிமைகளோடு போராடும் மக்களின் இரத்தப் பூச்சினாலான சிவப்பு மாளிகையாக மாறிவருவதை உணர்ந்துகொள்ள முடிகிறது.


இன்று ஈராக்கிய மக்கள் அங்குள்ள அந்நியப் படைகளுக்கு எதிராக அவர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்தும் யுத்தத்தை அமெரிக்கா இரும்புக்கரம் கொண்டு அடக்க முயலலாம். அது அமெரிக்க சுபாவமாகவும் இருக்கலாம்...

இவையாவும் 11-9-2001 இரட்டைக்கோபுரத் தாக்குதல் போன்றவற்றையும்... அதுபோன்ற செயல்களையும் நியாப்படுத்தவே உதவும்.

ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான தேசியவாதிகளின் எந்த நடவடிக்கையும் நியாயமானது எனப் பதிவு செய்துகொள்வதே வரலாற்றின் வழக்கம்.

இதனை அமெரிக்கா உணராவிடின் அவமானம் அதற்கு மட்டுமே...!

## நாடும் நடப்பும்




# யாழ். குடாநாட்டின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது

## புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் கல்வித் தரம் கடந்தகாலங்களிலும் பார்க்க தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதனைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வரவேண்டும்.

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு சிறுவர்களுக்கான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த இரண்டு கட்டங்களாக நடைபெற்று - சிறுவர் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி சில மாற்றங்களைச் செய்துள்ளோம்.

உண்மையில், மனமாற்றம் என்பது எல்லோரின் மனத்திலும் வரவேண்டும். உள்ளத்தில் எழும் ஒரு சிறிய மாற்றம் உலகத்தில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தலாம் என்பது உண்மையானது. நடைபெற்ற போர் - எங்கள்மீது திணிக்கப்பட்டது. இதனால், சிறுவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எமது யாழ்.மாவட்டக் கல்விநிலை தொடர்பாக அண்மைக் காலத்தில் வெளிவந்த புள்ளிவிபரங்கள் சில உண்மைகளை உணர்த்துகின்றன.

கல்விநிலை பின்னோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டு செல்கின்றது. இதனையிட்டு மிகவும் கவலையடைகின்றோம். எனவே, நாம் தற்போது முன்னெடுத்து இருக்கும் திட்டம் நல்லமுறையில் செயற்படுத்த வேண்டும். இதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் கைகொடுப்பதற்கு மிகவும் உற்சாகமாக இருக்கின்றன. இதன்மூலம்தான் போரில் அகப்பட்ட சிறுவர்களை நாம் மீட்டெடுக்கமுடியும். சிறுவர்களுக்கு சிறந்த சிந்தனைகளை போதித்து, கல்வியில் மேம்பட உதவவேண்டும். இது தற்போது இருக்கும் வழிகாட்டிகளுக்கு ஓர் வரலாற்றுக் கடமையாகும்.

நாம் தற்போதுள்ள 15 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்னும் சிறப்பாக மேற்கொள்ள பல திட்டங்களை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதிகம் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கே நாம் பணிசெய்து வருகின்றோம்.

சில பிரதேசங்களில் சிறுவர்களைவிட அவர்களின் பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இல்லை. ஏதோ வாழவேண்டும் என்ற சிந்தனையுடன் மட்டும்தான் அவர்கள் இருக்கின்றார்கள்

வரலாற்றுத் தவறினை விடாது, போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவிகளை மேற்கொண்டு புனர்வாழ்வளிக்க அனைவரும் முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

## பொது இடங்களில் கழிவுகள் போட மானிப்பாய் பிரதேசசபை தடைவிதிப்பு

மயானங்கள் மற்றும் பொது இடங்களில் கழிவுகள், மிருகங்களின் எச்சங்கள், இறந்த விலங்குகள், சிகை அலங்கார நிலைய கழிவுகள் இவற்றை கொட்டுவதற்கு மானிப்பாய் பிரதேச சபையினர் தடைவிதித்துள்ளனர். குறிப்பாக மயானங்கள் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. சில விஷமிகளினால் புனரமைப்புச் செய்யப்பட்ட இடங்களிலும் இவ்வாறான கழிவுகள் கொட்டப்படுகின்றன.

கழிவுகளை உரியமுறையில் புதைத்து சுகாதாரத்தை பேணுவதுடன், பொது இடங்களில் இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதைக் கண்டால் உடனடியாக மானிப்பாய் பிரதேசசபைக்குத் தெரியப்படுத்துமாறும் மானிப்பாய் பிரதேசசபையினர் - அந்தப் பகுதி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (91)

## ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மாகாண ஆளுநரைச் சந்திப்பர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி குறித்து தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநர் அசோக ஜெயவர்த்தனவை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். இந்தச் சந்திப்பு எதிர்வரும் புதன்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு பாடசலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் புதிய ஆசிரியர்களை நியமித்தல், தேசிய கல்வியியற் கல்லூரியால் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல், ஆசிரியர்களின் இடமாற்றம், பதவியுயர்வுகள் என்பன குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் என ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

# மக்களை மீளக்குடியமர்த்துவது குறித்து உடனடியாக எதுவும் செய்யமுடியாது

## வன்னி கட்டளைத் தளபதி தெரிவிப்பு

வன்னி மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது குறித்து உடனடியாக எந்த நடவடிக்கையையும் எடுக்கமுடியாது.

இவ்வாறு வன்னி மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சிசில் விஜயசூரியா தெரிவித்தார்.

அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் வன்னி மாவட்ட கட்டளைத் தளபதியை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள வேலங்குளம், இரணை இலுப்பைக் குளம், கோயில் புதுக்குளம், மற்றும் செங்கல் படை ஆகிய பிரதேசங்களின் மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு இந்தச் சந்திப்பின்போது சிவநாதன் கிஷோர் கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போதே, இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்த்துவது குறித்து எந்தவித முடிவுகளையும் கூறமுடியாது. மீளக் குடியமர்வது குறித்து ஆராய்ந்தே முடிவெடுக்கப்படும்.

இந்தப் பகுதிகளிலுள்ள வீடுகளை மக்கள் பார்வையிடுவதற்கும், அங்குள்ள கால்நடைகளை எடுத்துவருவது குறித்து விரைவில் சாதகமான பதில் தரப்படும் எனவும் சிசில் விஜயசூரியா தெரிவித்தார். (03)

உலக அரசியல்...

கே.ரீ.கணேசலிங்கம்




# முழு உலகத்திற்கும் ஏற்பட்டுள்ள புதிய சவால் நைஜீரியாவின் மதக்கலவரம் முன்னனுபவமாகும்

ஆபிரிக்கா கண்டத்தில் இன்று பிரபலமாகப் பேசப்படும் நாடாக தென்ஆபிரிக்கா விளங்கியபோதும், காலத்தால் என்றுமே மறக்க முடியாத ஆபிரிக்கநாடாக நைஜீரியா காணப்படுவதை யாரும் இலகுவாக நிராகரித்து விடமுடியாது. அதிலும், இலங்கைத் தமிழர் குறிப்பாக ஒரு விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் தமிழ் மக்களால் மறக்க முடியாதது மட்டுமல்ல, மறக்கக்கூடாத நாடாகவும் நைஜீரியா உள்ளது. மிகநீண்ட காலம் இபோ (Ibo) இனமக்கள் நடாத்திய தனி நாட்டுக்கான போராட்டம் பல நெருக்கடிகளைக் கடந்து துயரமான முறையில் தோல்வியைத் தளுவிய வரலாறு உலக விடுதலைப் போராட்டங்களுக்கு சகிக்கமுடியாத முன்னுதாரணமாக உள்ளது.

நைஜீரியா 250 இற்கு மேற்பட்ட பழங்குடிப் பிரிவுகளைக் கொண்டிருந்தபோதும், சில இனப்பிரிவுகள் ஒவ்வொரு பிரதேசத்தையும் ஆதிக்கத்துக்குள்ளாக்கியிருந்தன. அதன்படி நைஜீரியாவின் வடபிரதேசம் ஹோசா(Hausea) மற்றும் குலானி(ulani) இனப்பிரிவினரும், தெற்குப் பகுதியில் யோருபா(Yoruba) வும் கிழக்குப் பகுதியில் இபோ(Ibo) இனத்தவரும் மேலாதிக்க இனங்களாகக் காணப்பட்டன. அவ்வாறே மதரீதியான மக்கள் தொகை வேறுபாடும் நைஜீரியாவில் உண்டு. முழு மக்கள் தொகையில் அரைப்பங்கினர் முஸ்லிம்களாகவும், மீதியில் 30 சதவீதத்தினர் கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர். ஏனைய வீதத்தினர் பழமை மீது நம்பிக்கை கொண்ட பழங்குடிகளாக விளங்கும் மரபுவாதிகளாகவுள்ளனர்.

நைஜீரியாவின் ஆட்சிமுறை இராணுவசதிப் புரட்சிகளினால் மத்தியரசு ஆளப்பட்டு வந்தாலும், சமஷ்டி ஆட்சியைக் கொண்ட நாடாகத் தற்போது விளங்குகிறது. இபோ இனத்தவரின் எழுச்சிக்குப் பின்னர் நைஜீரியாவைப் பல மாநிலங்களாகப் பிரிக்கும் ஆட்சியியல் தந்திரோபாயமொன்று நிகழ்ந்து, சமஷ்டித் தன்மை உருவாக்கப்பட்டது. நூற்றுக்குநூறு வீதம் சமஷ்டி நிர்வாக, சட்ட, நீதியமைப்பு முறையைக் காணமுடியாத போதும், நிர்வாக அமைப்புப் பலமான சமஷ்டிப் பிரிப்பைக்கொண்டு இயங்குகிறது.

நைஜீரியா பற்றிய மேற்குறித்த அறிமுகத்தோடு அலசவேண்டிய மையப்பிரச்சினையை இனி நோக்குவதே பொருத்தப்பாடான அம்சமாகும். நைஜீரியாவில் புதிதாக ஆரம்பித்துள்ள மதப்போரையும் அதன் நோக்கத்தையும், அதனால் ஏற்படவுள்ள தாக்கத்தையும் பற்றியே இந்தக் கட்டுரை அதிக கவனம் செலுத்தவுள்ளது.

ஏறக்குறைய கிறிஸ்தவ மதப்பிரிவினருக்கு எதிராக நடாத்தப்பட்ட தாக்குதலில் 600 இற்கு



மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான மதவழிபாட்டு நிலையங்கள் அழிக்கப்பட்டுள்ளன. மக்கள் பீதியுடனும், அச்சதுடனும், பாதுகாப்புத் தேடுவதனைக் காணமுடிகிறது. ஏற்கனவே நிகழ்ந்த விடுதலைப் போராட்டத்தால் அதிகம் பாதிப்படைந்துள்ள நைஜீரியா மேலும் அழிவுகளை எதிர்நோக்குவதென்பது அபாயமான அரசியல், பொருளாதார எதிர்காலத்தையே அடைவதாக அமையும். நைஜீரியாவில் மதக்கலவரம் தீவிரமடைவதற்குரிய காரணத்தை சற்று விரிவாக நோக்குவோம்.

மதப்பிரிவுகளுக்குத் தற்போது 'மதம்' பிடித்துவிட்டன. மதம் பிடித்த யானை போன்று அரசியல் மதத்தை விழுங்கிவிட்டதனால், கீழைத்தேசம் எங்கும் கலகமும், அழிவுகளுமாகவே உள்ளது. இந்தியாவை அதிகம் பீடித்துள்ள மதஅரசியல், இலங்கைக்குள்ளும் ஊடுருவ முயன்று கொண்டிருக்கின்றது. ஆனால், நைஜீரியாவிலோ இராணுவ செல்வாக்குமிக்க அரசியலில் - மதமும் அரசியலும் இந்தியா போன்று ஒன்றாக வாய்ப்பில்லை. அப்படியாயின் மதப்பிரிவுகளுக்கிடையேயுள்ள போட்டித தன்மைதான் மதப்போருக்குக் காரணமா என்ற கேள்வி எழுகிறது. வெளிப்படையாகப் பார்த்தால் அவ்வாறுதான் புலப்படும், மதத்தின் அர்த்தத்தைப் புரியாத மத அமைபபுக்களும் அதன் போதனை மனிதர்களும் காணப்படுகின்ற கொடூரம் நைஜீரியாவில் மட்டுமல்ல எங்கள் நாடுகளிலுமுண்டு.

தற்போது மதப்பிரிவுகளின் பெருக்கம் ஒரு முறைமை சார்ந்த அல்லது நிறுவனம் சார்ந்த வடிவமாக மாறிவருகின்றன. பேரபாயம் என்பதை நைஜீரியர் மட்டுமல்ல, உலகின் பல வறிய நாடுகளின் மக்களும் புரிந்துகொள்ளவில்லை. கீழைத் தேசங்களின் எழுச்சியை, தீவிரத்தை, போரிடும் இயல்பை அடியோடு தகர்ப்பதற்கு மேற்குலகம் பிரயோகிக்கும் பல சாதனங்களில் இதுவுமொன்றாகும். இத்தகைய பிரிவுகளையும், அவற்றுக்குரிய அணுகுமுறைகளையும் கூர்மைப்படுத்தும்போது, சமூகத்தின் இயக்கம் ஓர் எல்லைக்கு அப்பால் நகரமுடியாத நிலையை அடையும். அதனால், சமூகம் பிரிவினைகளுக்கும, அதற்குள் எழும் குரோதங்களைத் தீர்ப்பதற்காகக் காலத்தை கழிப்பதற்கும் செலவு செய்யும் சமூகம் என்பது மதக் குழுக்களின் வடிவங்களாகமாறும். அதனால் ஏனைய விடயங்களில் கவனத்தைச் செலுத் தாமல் தவிர்ப்பதுடன், தீவிர போக்கைத் தடுக்கவும், அதனால் எழும் ஆபத்துக்களை நிறுத்தவும் மேற்கு வகுத்துள்ள உபாயமாகவே மதப்பிரிவுகள் உள்ளன.

நைஜீரியா ஒரு மரபுவாதப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள நாடு. அத்தோடு பொருளா தாரத்தின் ஒரு சில ஏற்றுமதிகளில் மட்டுமே தங்கியுள்ள நாடாகவும் உள்ளது. மேலும் இஸ்லாமியர்களே அதிகமாக வாழுகின்றனர். எனவே - மொத்தத்தில் அதிக நெருக்கடிகளையும், முரண்பாட்டுச் சக்திகளையும் கொண்ட தேசமாகவுள்ளது. இதில் தற்போது மேற்கு அமுலாக்கி வரும் உலகமயப்படுத்தல் நைஜீரியாவின் பழங்குடிகளுக்கும், மரபுவாதச் சக்திகளுக்கும் பெரும் சவாலாக உள்ளது. உதாரணத்திற்கு ஓர் எண்ணைக் கைத்தொழில் கம்பனியை எடுத்துக் கொண்டால் - 55 சத வீதமான இலாபத்தை PDC என்றழைக்கப்படும் பல்தேசியக்கம்பனி பெறுகின்றபோது, நைஜீரிய அரசாங்கம் 30 சதவீதத்தையே இலாபமாகப் பெறுகின்றது. இதுவே உச்சமான இலாபம் என 'போலாட் எம்.இஜின்லா'(Bolade M.Eginla) என்ற அறிஞர் நைஜீரியா தொடர்பான கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இது 1970 களில் மிகத் தாழ்நிலையிலேயே பல்தேசியக் கம்பனிகளால் இலாபமீட்ட முடிந்ததென்றும், தற்போதைய உலகமயப்படுத்தல் நைஜீரியாவின் உற்பத்தியைப் பாதித்ததுடன் இலாபத்தையும் இல்லாமல் செய்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் ஏற்பட்டுள்ள ஆபத்தாகவே மதப்பிரிவுகளின் வேகத்தையும் அதற்கு எதிரான தீவிரத்தையும் விவரணப்படுத்துகின்றார்.

அதாவது - மேற்கின் சுரண்டலை எவ்வாறு மறைமுகமாக அது கையாளுகின்றதோ, அவ்வாறே சுரண்டலினால் ஏற்படும் விளைவுகளையும் கையாண்டு வருகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள், மேற்குடன் ஒப்பிடும்போது வளர்ச்சியடையாத அரசியலையும், பொருளாதாரத்தையும், உடைய நாடுகள் அரசியல் விழிப்புணர்வற்ற மக்களையுடைய நாடுகள் எல்லாமே உலகமயப்படுத்தலுக்கு முகங்கொடுக்க முடியாது திணறும்போது, மதப்பிரிவுகளைச் சாத்தியப்படுத்தும் நிலையை உருவாக்கும் சந்தர்ப்பத்தில் அரசுகள் வலுவிழந்துபோகும் நிலை உருவாகும். அரசுகளின் கட்டுப்பாடு தளரும் போது பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் அதனால், உலகமயப்படுதல அமுலாகும வாய்ப்புக்கள் சாத்தியப்படும். அத்தகைய சூழல ஒன்றை நோக்கியே மேற்குலகத்தின் நகர்வுகள கீழைத்தேசம் முழுவதும் பரப்பப்பட்டு வருகின்றது.

மதப்பிரிவுகளின் அதிகப்படுத்தலையோ அவற்றின் பொருளாதார ரீதியான ஆதிக்கத்தையோ மரபுவாதக் குழுக்கள் சகித்துக் கொள்ளமாட்டாது. அவை அவற்றுக்கு எதிராகக் கிழர்ந்து எழுகின்ற நிலையைத் தவிர்க்க முடியாது. ஆனால், இதில் மரபுவாத சக்திகளுக்கோ புதிய மதப்பிரிவுகளுக்கோ மேற்குலகத்தின் அடிப்படைத் தந்திரோபாயம் விளங்கவில்லை. மதம் மனிதனை நல்வழிப்படுத்துவதற்குரியது என்பதை எல்லாப்பிரிவுகளும் புரிந்து கொள்ளுமாயின், ஊடுருவல் சக்திகளின் ஆதிக்கமோ, மரபுவாதக்குழுக்களின் தீவிரப்போக்கோ இல்லாமல் போய்விடும்.

எனவே, நைஜீரியாவில் எழுந்துள்ள மதக் கலவரத்திற்குப் பின்னணியில் மேற்குலகத்தின நலன் காணப்படுகின்றது. இது முழு உலகத்திற்கும் எழுந்துள்ள புதிய சவாலாகும். இதனை வெறிகொண்டு அடக்குவதைவிட, உரிய பாணியில் அதற்குரிய முறைமையில் அணுகும்போது மட்டுமே மேற்கின் உபாயத்தை முறியடிக்கமுடியும்.

**மதப்பிரிவுகளுக்குத் தற்போது 'மதம்' பிடித்துவிட்டன. மதம் பிடித்த யானை போன்று அரசியல் மதத்தை விழுங்கி விட்டதனால், கீழைத்தேசம் எங்கும் கலகமும், அழிவுகளுமாகவே உள்ளது. இந்தியாவை அதிகம் பீடித்துள்ள மத, அரசியல் இலங்கைக்குள்ளும் ஊடுருவ முயன்று கொண்டிருக்கின்றது. ஆனால்; நைஜீரியாவிலோ இராணுவ செல்வாக்குமிக்க அரசியலில் - மதமும் அரசியலும் இந்தியா போன்று ஒன்றாக வாய்ப்பில்லை.**

மக்கள் பிரச்சினை

# ஓய்வூதியம் பெறமுடியாது அவதியுறும் பொதுமக்கள்!

விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் பெறமுடியாது வருடக்கணக்காக இழுத்தடிப்புச் செய்யும் பரிதாபகரமான நிலையைக் கரவெட்டிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பலர் எதிர்நோக்கியுள்ளனர். கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடந்து வரும் இச் செயலுக்கு நீதிகேட்டுப் பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ்.அரச அதிபரை நாடியுள்ளார்.

மேற்படி பாதிப்புக்குள்ளானவர்களில ஒருவர் தமது குறையை நமது ஈழநாட்டிற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவரது கணவரான ஆசிரியர் (ஓய்வூதியர்) காலமாகி விட்டார். அதனால் பிரதேச செயலகத்திற்கு விதவைகள் ஓய்வூதியத்திற்கு அதே ஆண்டு பெப்ரவரியில் விண்ணப்பித்துள்ளார். பல மாதங்களாக ஓய்வூதியம் இல்லாமல் கஷ்டப்பட்ட வேலையற்ற இரு பிள்ளைகளின் தாய் (ஒருவா இயலாவாளி, மற்றவர் படிப்பவர்) காரியாலயத்திற்குப் பலதடவை அலைந்தார். காலமானவரின் சுயவிபரக்கோவை கொழும்பு ஓய்வூதியக் காரியாலயத்திலிருந்து தமக்குக் கிடைக்கவில்லையென்றும், சுயவிபரக்கோவை கிடைத்தால் ஒரு வாரத்தில் செய்து தருவோம் என்றும் ஓய்வூதியக்கிளை பிரதம லிகிதர் ஆறுதல் கூறியதோடு கொழும்பிற்குச் சுயவிபரக கோவைக்காகத் தாங்கள் அனுப்பிய கடிதப் பிரதியைக் கொடுக்க முடியுமானால் சுயவிபரக்கோவையை கொழும்பிலிருந்து எமக்குக் கிடைக்கச் செய்யுங்கள் எனக்கூறியுள்ளார்.


இறந்தவரின் சுயவிபரக் கோவை கொழும்பிலிருந்து எடுப்பதற்கு அவ்விதவை பெரும் பிரயத்தனங்களை எடுத்து ஜனவரி மாதம் 2004 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கரவெட்டிக்குக் கிடைக்கச் செய்துள்ளார். இதனிடையே குறித்த செயற்பாட்டு லிகிதரும் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். ஓய்வூதியத்துக்குரிய விதவை கரவெட்டிக்குச் சென்று கேட்டபோதெல்லாம் விரைவாகச் செய்து தருகின்றோம என்று பல தடவை சாட்டுப்போக்குச் சொல்லியுள்ளார்கள்.

மார்ச் மாதம்வரை தமது கெட்டித்தனத்தால் எப்படியோ இழுத்தடிப்புச் செய்துவிட்டதோடு ஊழியர் பற்றாக்குறை ஓய்வூதியம் செய்வதற்கான லிகிதர் இல்லை என்று நிதி உதவியாளர், கணக்காளர் ஆகியோர் காரணங்கூறி வேண்டுமானால் மேலிடங்களுக்குப் போய் முறையிடுங்கள் என்று விடயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்கள். மேலிடமான பிரதேச செயலரிடம் முறையிட்டார்கள். அவரால் எதுவும் செய்யமுடியவில்லை. நீங் கள் அரச அதிபருக்கு முறையிடுங்கள் என்று கையை விரித்துவிட்டார். இதனால் அவர்கள் அரச அதிபரை நாடியுள்ளார்கள்.

இதனிடையே இவர் சம்பந்தப்பட்ட மட்டில் இன்னொரு ருசிகரமான சம்பவம், மிக வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. காலமானவர் உயிருடன் இருக்கும்போது தனது ஓய்வூதியத்தைக் காட்டி, வீடமைப்பு அதிகாரசபையில் கடன்பெற்று, அதனை ஓய்வூதியத்திலிருந்து செலுத்திவந்துள்ளார். மரணமான காலத்திலிருந்து ஒருவருட காலம் 2003 டிசம்பர்வரை தவணைப்பணம் கட்டப்படவில்லையென்று 2003 டிசம்பர் மாதம் காலமாவரின் மனைவியை அணுகி அந்த வருடத்துக்குரிய முழுப்பணத்தையும் செலுத்துமாறு அவரது வீட்டிற்குச் சென்று வற்புறுத்தியுள்ளார்கள்.

2004 ஜனவரியில் மீண்டும் அவர்கள் வீட்டுக்குச் சென்று நெருக்குதல் கொடுத்துள்ளார்கள். சுயவிபரக்கோவை கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளதால் ஓய்வூதியம் விரைவில் கிடைக்குமதானே என்ற எண்ணத்தில், வீடமைப்பு அதிகாரசபைக்கு 2003 டிசம்பர் மாதம் வரைக்கான பணத்தைக் கடன்பட்டுச் செலுத்திவிட்டார். இப்போது வீடமைப்பு அதிகாரசபையினர் 2004 ஜனவரி ஏப்ரல் வரைக்கான பணத்தை உடன் கட்ட வேண்டும். தவறினால் கடும் நடவடிக்கை எடுப்போமென்று வீடு தேடிச்சென்று கூறியுள்ளதாகவும் அந்த விதவை அழாக்குறையாகக் கூறுகிறார்.

இந்த விதவை கணவனை இழந்த இந்தக் காலப்பகுதியில் எதுவித வருமானமுமின்றி எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார் என்பதைச் சாதாரண மக்களால்கூட ஊக்குவிக்க முடியும். ஆனால் இந்த உத்தியோகத்தர்களால் உணரமுடியவில்லையே! ஒருசிலர்விடும் பொறுப்பற்ற செயல்களால் அரச உத்தியோகத்தர்களுக்கு எவ்வளவு இழுக்கைப் பொதுமக்கள்மட்டில் இவர்கள் ஏற்படுத்துகிறார்கள் என்பதை உணரமறுக்கின்றார்கள்.



முப்பது, நாற்பது வருடங்களை அரச ஊழியர் தமது குடும்பத்துக்கு அபயமளிக்கும் ஓய்வூதியத்திற்காக, தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றிய பலனை அனுபவிக்கத் தடையாக இருக்கும் ஓய்வூதியக் கிளைகளில் கருமமாற்றும் சகலரும் தாமும் அரச ஊழியர், ஊய்வூதியத்துக்குரியவர்கள் என்று எண்ணிச் செயல்படுவார்களேயானால் பிரச்சினையே இருக்காது, செய்வார்களா?

இங்கு கூறப்பட்ட சம்பவம் போல் எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் என்பதை இன்னும் கூறமுடியும். அரச ஊழியர்கள் ஓய்வூதியம் பெறுவதில் இத்தகைய இடர்பாடுகளென்றால் சாதாரண மக்கள் தமது தேவைகளைப் பெறுவதில் இவர்களைப் போன்றவர்களால் எவ்வளவு துயரங்களை அனுபவித்திருப்பார்கள் அனுபவிப்பார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கவேண்டும்.

# செச்சினிய தலைநகரில் குண்டுவெடிப்பு

# ஜனாதிபதி உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர்



(குரொஸ்னியா)

செச்சினிய தலைநகர் குரொஸ்னியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ரஷ்ய ஆதரவான ஜனாதிபதி அகமட் கடிரோவ் உட்பட மேலும் 30 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். தாக்குதலில் கொல்லப்பட்ட அகமட் கடிரோ உண்மையான தலைவர் என ரஷ்ய ஜனாதிபதி விலாடிமீர் புடின் தெரிவித்ததுடன் கொலையாளிகளைப் பழிவாங்கப் போவதாகவும் சூழுரைத்துள்ளார்.

செச்சினிய ஜனாதிபதி அகமட் கடிரோவின் மரணம் கிரெம்ளினுடனான பேச்சு வார்த்தைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைகளை செச்சினியத் தீவிரவாதிகளே நிகழ்த்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இற்றா - ராஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது உலகப் போரின் வெற்றி தொடர்பாக நடத்தப்பட்ட நிகழ்வின்போது முக்கிய தலைவர்களின் இருப்பிடத்திலேயே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெடிகுண்டுத் தாக்குதலில் செச்சினியாவிற்கான ரஷ்யப் படைத்தளபதி வலேரி பிரரோவும் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தபோதும், அவர் வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிவருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதேவேளை, குண்டுவெடிப்பின்போது மக்கள் பீதியடைந்து எல்லாத் திசைகளிலும் சிதறி ஓடியதாகத் தொலைக்காட்சிச் செய்திகள் தெரிவித்தன.

இதேநேரத்தில் செச்சினியா உள்துறை அமைச்சின் அதிகாரிகளின் கருத்தில் 32 பேர் வரை கொல்லப்பட்டு 42 பேர்வரை காயமடைந்துமுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செச்சினியாவின் பிரதமர் குசெய் அப்ரமோவ் தற்காலிக ஜனாதிபதியாக அதிபர் புடினினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### தொடரும் வன்முறைகளால்

## பெருமளவு சூடான் மக்கள் சாட் நாட்டிற்குள் தஞ்சம்

(சூடான்)

சூடானின் டர்பர் மாநிலத்தில் இடம்பெற்றுவரும் சண்டையை அடுத்து பெருமளவான சூடான் மக்கள் அயல் நாடான சாட்டிற்குச் செல்வதையிட்டு அந்த நாடு சூடான் அரசைக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சாட்டின் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கையில்,

சாட் இராணுவம் சூடானின் நடவடிக்கைகளால் பொறுமை இழந்து வருகின்றது. சூடான் நாட்டு ஹெலிகொப்ரர்கள் சாட் நாட்டு வான் பரப்பில் அத்துமீறிப் பிரவேசிப்பது கவலையை அளிக்கின்றது. எமது பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு எனத் தெரிவித்துள்ளது.

அராபிய ஆயுதக் குழுக்களினால் சூடான் நாட்டிலிருந்து மில்லியன் கணக்கான கறுப்பின மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு லட்சம் பேர் அயல் நாடான சாட்டிற்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று சூடானின் இரண்டு ஹெலிகொப்ரர்கள், சாட்டின் வான் பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து இரண்டு மணிநேரம் வரை பறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - சாட்டில் அத்து மீறி உள்நுழைந்த ஜான்ஜாலிட் கூலிப்படைகளுடன் நடந்த மோதலில் சாட் இராணுவ அதிகாரி ஒருவரும், ஆறு பொதுமக்களும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அராபிய கூலிப்படைகளால் ஏற்படுத்தப்படும் வன்முறைகளை சூடான் அரசு கட்டுப்படுத்த தவறிவிட்டதெனக் கடந்த மாதம ஐக்கிய நாடுகள் சபை கண்டித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### சட்டவிரோத ஆயுதங்களை கட்டுப்படுத்தாமைக்காக

# அதிபர் புஷ்ஷிற்கு எதிராக வொஷிங்ரனில் ஆர்ப்பாட்டம்!

சட்டவிரோதமான ஆயுதங்களைத் தடை செய்வது என்ற உறுதிமொழியில் இருந்து ஜோர்ஜ் புஷ் தவறியுள்ளார் எனத் தெரிவித்து வொஷிங்ரனில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பத்து வருடமான இந்த தடைச்சட்டம் இந்த செப்ரெம்பரில் முடியவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதித் தேர்தல் நவம்பரில் வரவுள்ள நிலையில் புஷ் போட்டியிடுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி சட்டம் 1994 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதியான பில் கிளின்டனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

சில ஆய்வாளர்கள் மேற்படி சட்டம் வலுவற்றுப்போனதாகவும் அதைப் புதுப்பிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அன்னையர் தினமான நேற்று மக்கள் பெருமளவு ஊர்வலங்களை வொஷிங்ரனில் நடத்தினர்.

இதேபோன்ற ஆர்ப்பாட்டமொன்று 4 வருடங்களுக்கு முன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 750,000 மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் அதிபர் புஷ் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். அவர்மீது இச்சட்டத்தை வலுப்படுத்தும்படி



அழுத்தங்கள் பெருகியுள்ளன.

அத்துடன், ஜனாதிபதி புஷ் தேசிய துப்பாக்கி வைத்திருப்போர் சங்கத்தாலும் அழுத்தத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார். மேற்படி சங்கம் குற்றங்களைக் குறைக்கவில்லை எனக் கூறியது. இச்சங்கம் மிகவும் வலுவானதுடன் உயரதிகாரிகள், கட்சியிலுள்ள அங்கத்தவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஊர்வலத்தை நடத்தியவர்கள் துப்பாக்கி பாவனையை ஓரளவு தடைசெய்யும்படியும் கேட்டுக்கொண்டனர்.

உலக நோக்கு

# தென்கொரிய இராணுவ அதிகாரி பண மோசடி தொடர்பாகக் கைது

தென்கொரிய - அமெரிக்கக் கூட்டுப்படைகளைச் சேர்ந்த தென்கொரிய நாட்டு உயர் இராணுவ அதிகாரியொருவர் பண மோசடியில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு தென்கொரிய இராணுவ உயர் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டார்.

மூன்று நாட்களாக நடத்தப்பட்ட விசாரணையின்பின் இராணுவ சிறையில் குற்றஞ்சாட்டப்பட்ட சின் இல் ஆன் (வயது 57) அடைக்கப்பட்டார்.

ஜெனரல் சின், தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை மறுத்ததுடன், அரசாங்கக் கட்சிகளாலும், மற்றைய இராணுவ அலுவலர்களாலுமே பணம் செலவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

தென்கொரியாவில் ஊழல் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முதலாவது உயர் இராணுவ அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க - கொரிய கூட்டுப் படைகளின் இரண்டாம் நிலைப் படைத் தளபதியாக இவர் பதவி வகிக்கிறார்.

பெயர் குறிப்பிடவிரும்பாத தென்கொரிய பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரி



விக்கையில் -

ஜெனரல் சின் மீது மோசடிக் குற்றமே சுமத்தப்பட்டுள்ளது. லஞ்சக் குற்றம் அல்ல என்று குறிப்பிட்டார்.

### யூதக் குடியிருப்பு தொடர்பாக

## இஸ்ரேல் பிரதமரின் முடிவு குறித்து அந்நாட்டு அமைச்சரவை விவாதம்

காஸாப் பகுதியில் உள்ள யூதக் குடியிருப்புக்களை வெளியேற்றுவது தொடர்பான இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனின் தன்னிச்சையான முடிவு குறித்து இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று விவாதமொன்றை நடத்தியுள்ளது.

ஒரு வாரத்திற்கு முன்னர் 'லிகுட்' கட்சி அங்கத்தவர்கள் இந்தத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் ஏரியல் ஷரோன் இந்த விடயம் தொடர்பாகத் தம்முடன் முன்னரே கலந்தாலோசித்திருக்கவேண்டும் என இஸ்ரேலிய அமைச்சரவை தெரிவித்திருந்தது. அத்துடன் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் ஆதரவும் இஸ்ரேலியப் பிரதமரின் யூதக் குடியேற்றங்களை வெளியேற்றும் திட்டத்திற்குக் கிடைத்திருந்தது.

யூதக் குடியிருப்புக்களை வெளியேற்றுவதற்கான திட்டம் தோல்வியடைந்திருந்து பலஸ்தீனத் தலைவர்களிடையே பாதை வரைபு எனப்படும் சமாதானத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த மாத இறுதியில் பலஸ்தீன பிரதமர் அகமட் கூரே, அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோலிசாவைச் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பில் சமாதானத்திற்கான பாதை வரைபினை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகத் தெரிவிக்கவுள்ளார்.

இந்தச் சமாதான பாதை வரைபில் பலஸ்தீனம் என்ற நாட்டினை அடுத்த ஆண்டில் உருவாக்குவதற்கான திட்டம் வரையப்பட்டிருந்தது.

# கைதிகள் துன்புறுத்தப்பட்டாலும் ஈராக் பல நன்மையைப் பெற்றுள்ளது

## அமெரிக்க நிர்வாக அதிகாரி பிறீமர் தெரிவிப்பு



அமெரிக்கப் படையினர் - ஈராக்கிய கைதிகள் மீது துஷ்பிரயோகங்களை மேற்கொண்டிருந்த வேளையிலும், அமெரிக்காவினால் ஈராக் பல நன்மைகளை அடைந்துள்ளதாக, ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிறீமர் தெரிவித்தார்.

ஈராக் மக்களுடன் அமெரிக்கப் படையினர் இணைந்து ஈராக்கின் மீள் கட்டுமானத்திற்குத் தமது உண்மையான உணர்வினை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில்,கைதிகள் தொடர்பான சம்பவங்களை 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்தே, ஈராக்கிய நிர்வாகி பிறீமர் தெரிந்து வைத்திருந்தார் என்று கூட்டுப் படையின் பேச்சாளர் செநொர் தெரிவித்தார். அத்துடன் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான படங்களை முதலில் எப்பொழுது பார்த்தார் என்ற விபரங்களைத் தெரிவிக்க முடியாதுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஈராக்கில் மனித உரிமைகளுக்கான அமைச்சராகக் கடமையாற்றிய அப்டைல் பசெற் ரேக்கி தெரிவிக்கும்போது, ஈராக்கிய கூட்டுப் படையினர் இந்த உண்மையைத் தெரிவிப்பதற்கு முன்னரே பிறிமர் அறிந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் சென்ற நவம்பர் மாதம் பிறீமருடன் உரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்த வேளையில் சிறைக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான சம்பவங்களைப் பிறிமருக்குத் தெரிவித்த வேளையில், எந்தவிதமான பதிலையும் அவர் தெரிவிக்கவில்லையெனவும் ரேக்கி குறிப்பிட்டிருந்தார்.

இவற்றினிடையே அமெரிக்கக் காங்கிரஸின் அங்கத்தவர் ஸ்டிவ் பையர் 1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போர் நடைபெற்ற காலத்தில் வளைகுடாவின் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியிருந்தார். இந்தச்



சம்பவம் தொடர்பாகக் குறிப்பிடும்போது,

ஈராக்கில் கைதிகள் நடத்தப்படும் விதம் தொடர்பாக ஆராய்வதற்கு ஈராக்கிற்குச் செல்வதற்குத் தயாராக உள்ளதாகக் குறிப்பிட்டபோது, பென்ரகன் மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எரிபொருட்களின் விலைகள் விரைவில் அதிகரிக்கப்படும்!

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி டீசல் மற்றும் பெற்றோலுக்கான விலைகள் லீற்றர் ஒன்றுக்கு இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. இவ்வாறு அதிகரிப்பதன் மூலம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மாதமொன்றுக்கு ஏற்படும் இழப்புக்களை ஈடு செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டால், அடுத்த சில மாதங்களில் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் எரிபொருட்களின் விலை மாற்றங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படவில்லை.

எவ்வாறாயினும் தற்போதைய உலக சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படவில்லையெனினும், அதற்காக வரும் இழப்பீடுகளை திறைசேரியே செலுத்தி வருகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெடகம தெரிவிக்கையில், உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரிக்குமாக இருந்தால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பது தவிர்க்கமுடியாததாகும்.

தற்போதைய எரிபொருட்களின் விலைகளை மறு பரிசீலனை செய்யுமாறு திறைசேரிக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் அதற்கான பதிலை இன்று பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### சமுர்த்தி உதவி நிதியில்

# கட்டாய சேமிப்புப் பெறுவதை உடனடியாக நிறுத்த உத்தரவு!

சமுர்த்தி உதவி பெறுபவர்களிடமிருந்து கட்டாய சேமிப்புப் பெறப்படுவதை உடனடியாக இடைநிறுத்துமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.

சமுர்த்தி அமைச்சுத் தொடர்பாக மீளாய்வுசெய்து ஜனாதிபதி சந்திரிகா, அதிகாரிகளுக்கு விடுத்த பணிப்புரையில் - இதற்கு முன்னர் சேமிப்புக்காக கழிக்கப்பட்ட பணத்தை உரியவர்களிடம் மீள வழங்குமாறும் கேட்டுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் சமுர்த்தி நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்து கவலை தெரிவித்த ஜனாதிபதி - அதிலுள்ள குறைபாடுகள் அனைத்தையும் விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் சமுர்த்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபா நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கட்டாய வங்கிச் சேமிப்புக்கள் அரச வங்கியில் இடப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வங்குறோத்து அடைந்த தனியார் வங்கியொன்றில் 300 கோடி ரூபா சேமிப்புத் தொகையாக இடப்பட்டது.

முன்னாள் சமுர்த்தி அமைச்சர், மற்றும் அதிகாரிகள் சிலர் தமது சொந்தத் தேவைகளுக்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 34 அகதிகள் நாடு திரும்பினர்

(மன்னார்)

தமிழ்நாட்டில் இருந்து படகுகள் மூலம் நாடு திரும்பிய 34 இலங்கை அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் என்.எம்.எம். அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை நாடு திரும்பிய இந்த 34 அகதிகளையும் தலைமன்னார் கடற்படையினர் கைது செய்து, மன்னார் பொலிஸாரிடம் கையளித்தனர். அவர்கள் மன்னார் மாவட்ட நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோதே, அவர்களைச் தமது சொந்த இடங்களுக்குசெல்ல அனுமதி வழங்கப்பட்டது.

# மணல் கடத்திய ட்ரக்ரர் தீயிட்டு எரிக்கப்பட்டது!

வடமராட்சி கிழக்கு - மணற்காடு பகுதியிலிருந்து மணல் ஏற்றிவந்ததாகக் கூறப்படும் உழவு இயந்திரம் ஒன்று நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மேற்படி உழவு இயந்திரத்தை வழிமறித்த ஒரு கும்பல், சாரதியை விரட்டியபின், அதற்கு தீயிட்டதாகக் கூறப்படுகிறது.

மணற்காட்டுப் பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம், உபய கதிர்காமம் பகுதியில் வைத்து வழிமறிக்கப்பட்டே தீயிடப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக மணல் கடத்தும் செயலுடன் தொடர்புபட்ட சம்பவம் ஒன்றிலேயே இந்த உழவு இயந்திரம் தீயிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - அண்மையில் இவ்வாறான மணல் கடத்தலுடன் ஈடுபட்டிருந்த ரிப்பர் ரக வாகனம் ஒன்றை தடுத்து நிறுத்த நெல்லியடி பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியிருந்ததும் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (13,202)

# இங்கிலாந்தில் உயிரிழந்தவரின் — சடலத்தை எடுத்து வருவதில் அரசுக்கு அக்கறையில்லையாம்!

## உறவினர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இங்கிலாந்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் உயிரிழந்த இலங்கையைச் சேர்ந்த விபுல பிரசன்னவின் உடலை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதது குறித்து அவரது உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்தின் விம்பிள் பார்க் ரயில் நிலையத்தில் கறுப்பினத்தவர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் இலங்கையைச் சேர்ந்த விபுல பிரசன்ன கடந்த 5 ஆம் திகதி உயிரிழந்தார்.

தன்னுடைய ஐந்து வயது குழந்தையின் கால்களை மிதித்த காரணத்தால் கோபமடைந்த கறுப்பினத்தவர் ஒருவரின் தாக்குதலில் காயமடைந்த இவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3 நாட்களின் பின் உயிரிழந்தார்.

தாக்குதலை மேற்கொண்டவர் கைதுசெய்யப்பட்டதோடு, நேற்று இங்கிலாந்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பஸ் விபத்தில்...

இவ்விபத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த மோகன் ரஞ்சினிதேவி (வயது 40), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா பாலச்சந்திரன் ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் நால்வர் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இறந்தவரில் ஒருவரான ரஞ்சினிதேவி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை எனத் தெரிவிக்கப்படுகிறது. (01,111)

## சுகவீனத்தால் போராளி சாவு

(கிளிநொச்சி)

சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை தேன்மலர் என்று அழைக்கப்படும் கண்டாவளை புளியம்பொக்கணையை நிரந்தர முகவரியாக கொண்ட மகாலிங்கம் பிரதீபா என்னும் போராளியே சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு...

முன்நிறுத்த வேண்டும்.

இது போன்ற கொலைகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இது போன்ற கொலைகள் மிகுந்த அதிருப்தியைத் தருகின்றது.

இது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு கொஞ்சமும் ஏற்புடையதல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வல்லைப் பாலம் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வல்லைப்பாலத்தை தற்காலிகமாகச் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக பல தாக்குதல்களுக்கும் உள்ளாகி தேசப்படுத்தப்பட்டிருந்த இந்தப் பாலம் உறுதியான திருத்த வேலைகள் இடம்பெறாத காரணத்தால் மழை காலத்தில் சேதமடைவதும் அவ்வாறு சேதமடைவதைத் திருத்துவதும் வழமையாக இடம்பெறும் செயலாகிவிட்டது.

இதன் அடிப்படையிலேயே கடந்த சில நாட்களாகப் பெய்த மழை காரணமாகச் சேதமடைந்திருந்த இந்தப் பாலத்தை தற்காலிகமாகச் செப்பனிடும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மழையால் பாதிக்கப்பட்டிருந்த இந்தப் பாலத்தின் ஊடாகச் சென்ற வாகனங்கள் கடந்த சில தினங்களாக மிகவும் சிரமப்பட்டே பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வெளிவிவகார...

வெளிவிவகார செயலர் கொலின் பவலுக்கு விளக்கிக்கூறவிருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் நாட்டிலுள்ள சகல சமூகத்தினருக்கும் நன்மையளிக்கும் விதத்தில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நோக்கம் பற்றியும் எடுத்துக் கூறுவார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் தற்போதைய நிலைமை, சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் பற்றியும் இவர்களுடைய சந்திப்பில் ஆராயப்படும்.

அத்தோடு இரு நாடுகளுக்கு இடையே இருந்து வரும் பாதுகாப்பு, பந்தோபஸ்து உறவினை அபிவிருத்தி செய்வதற்கான பேச்சுவார்த்தை என்பனவும் இடம்பெறவுள்ளன.

இலங்கை கடற்படைக்கு அடுத்த மாதம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவிருக்கும் கரேகஸ் என்ற அமெரிக்கப் போர்க்கப்பலுக்கும் அமைச்சர் கதிர்காமர் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவப்...

லேயே வசந்த கொலம்பகே உயிரிழந்தார். இதன்பின் இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் சடலம் இறந்தவரின் சொந்த இடமான கம்பஹாவுக்கு அனு[illegible] வைக்கப்பட்டது.

இறந்த வசந்த கொலம்பகே - ஐந்தாவது கவசவாகன பிரிவைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகள்...

அத்தியட்சகர் தயா சமரவீர, இராணுவத்தரப்பில் 22 ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஏ.எஸ்.எம். சாகிர், கப்டன் ராஜபக்ஷ, கடற்படை தரப்பில் லெப்டினன்ட் கொமாண்டர் எஸ்.திலகரெட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் திருகோணமலை மாவட்ட பிரதித் தலைவர் பூடில் இஸ்ரேல்சன், டாக்பின் அட்அட்னன்ஸ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பு பற்றி விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கருத்து தெரிவிக்கையில், படைத்தரப்பினரையும் கண்காணிப்புக் குழுவினரையும் அறிமுகமாகும் சந்திப்பாகவே இது நடைபெற்றது. மிகவும் கண்ணியமாக எமது சந்திப்பு நடைபெற்றது. தொடர்ந்து எதிர்காலத்தில் மாவட்டத்தில் அரசியல் நிலை பற்றி விரைவில் கலந்துரையாடவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

சந்திப்பு சுமார் 1 மணிநேரம் நடைபெற்றது. படையினருடனான சந்திப்பிற்கு முன்னதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைச் சந்தித்தார். (04)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.